30.05.2013

# உதய சூரியன்

*Source for reading hunters*

களம் - 01. சூரியன் -39 பக்கம்: 32 விலை: 20/=



## மரணம் தீர்வல்ல

## தீயினால் தீர்வா?




Imporrdt & Distributed by
AJANTHA STEELS
265/A, Old Moor Steet, Colombo 12 Tel: 0112448583, Fax 0112345121
E-mail: ajanthasteel@sltnet.lk

TREND CERAMIC
IMPORTERS OF TILES @ SNITARYWARE
Showroom
No. 3, Kandawatta Road,
Nugegoda.
Tel: 011 5757059
Fax: 011 7429110
Email: ajanthasteel@sltnet.lk



Jaffna Showroom
424, K.K.S Road
Tel: 021 4923757

Web : www.ajanthasteels.com

A MEMBER OF AJANTHA STEELS

# மீள் குடியேற்றத்திற்காக காத்திருக்கும் ஒற்றாக்குளம் மக்கள்

வவுனியா மாவட்டத்தின் செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கங்கன்குளம் கிராம அலுவலர் பிரிவின் ஒரு கிராமமே ஒற்றாக்குளம். மன்னார்-மதவாச்சி பிரதான வீதியருகில் செட்டி குளம் புகையிரத நிலையத்திற்கு அருகில் உள்ள இக் கிராமமானது 1915 ஆம் ஆண்டு தோற்றம் பெற்றதுடன், செட்டிகுளத்தின் மிகப் பழமையான கிராமங்களில் ஒன்றாகும்.

இக் கிராமத்தில், ஆரம்பகாலத்தில் 54 குடும்பங்களைச் சேர்ந்த 200 பேர் வசித்து வந்தனர். 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தினால் அச்சமடைந்த ஒற்றாக்குளம் மக்கள் இடம்பெயர்ந்து மடுவில் இரண்டு ஆண்டுகள் வாழ்ந்து மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியிருந்தனர். தமது சொந்த இடத்தில் குடியிருந்த மக்கள் யுத்தம் காரணமாக 1990 ஆம் ஆண்டு மீள இடம்பெயர வேண்டியநிலை ஏற்பட்டது.







இது தொடர்பாக செ.சகாயநாதன் கூறுகையில்; இது எங்கட சொந்தக் காணி. இந்தக் காணிக்கு எங்களிட்ட ஜெயபுமி உறுதி இருக்கு. பிரச்சினையால எங்கட காணியை விட்டு நாங்க எண்பத்தி மூன்றில இடம்பெயர்ந்து மடுவில ரெண்டு வருசம் இருந்திட்டு மீள இங்க வந்து இருந்தம். 1990 ஆம் ஆண்டு தலைகள் துண்டிக்கப்பட்ட மூன்று சடலங்கள் எங்கட கிராமத்தில கிடந்திச்சு. எல்லாரும் பயந்து இங்க இருந்து திருப்பி இடம்யெர்ந்து போட்டோம் எனக் கூறினார்.

ஒற்றாக்குளத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் சிலர் இந்தியாவுக்கு சென்றதுடன், சிலர் உறவினர் வீடுகளிலும் வசித்து வந்தனர். இந் நிலையில் யுத்தம் முடிவடைந்துள்ளமையால் இப்பகுதி மக்கள் மீள் குடியேற்றத்திற்காக வந்த போதும் அவர்களை மீள் குடியேற்றுவதற்கான எந்த வேலையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என இம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மீள் குடியேற்றம் தொடர்பாக கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாளர்களிடம் கேட்கின்ற போது மக்களை அந்த இடத்தை துப்புரவு செய்து போய் இருக்குமாறு கூறப்பட்டுள்ளது.





இது தொடர்பாக திருமதி.பி.தயாபரன் கூறுகையில்; நாங்க மீள் குடியேற்றத்திற்காக 44 குடும்பங்கள் இப்ப கிராம அலுவலரிட்ட பதிஞ்சிருக்கிறம். எங்களை துப்புரவு செய்து அங்க போய் இருக்க சொல்லினம். ஆனா எங்கட இடத்தில 2000 ஆம் ஆண்டு முதல் 2011 வரை பெரிய ஆமி காம்ப் இருந்தது. அந்த காம்ப் இப்ப எடுத்த போதிலும் அதண்ட பாதுகாப்புக்கு அமைக்கப்பட்ட மண் அரண்கள், காவல் நிலைகள் எல்லாம் அப்படியே இருக்கு. நாங்க போய் துப்புரவு செய்யேக்க அதுக்க எதாவது இருந்து வெடிக்குமோ என்ற பயத்தால எங்களால போகேலாமல் இருக்கு. துப்புரவு செய்து தாங்க என்று கேட்டோம். யாரும் செய்து தாரேல. இனி யாரிட்ட போய் சொல்லியழுகிறது என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

இராணுவ முகாம்களுக்கான அடையாளங்களை சுமந்தவாறு காணப்படும் இவ் ஒற்றாக்குளத்திற்கான போக்குவரத்தும் தற்போது பாதிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் உதவியுன் அமைக்கப்பட்டுள்ள புகையிரதப் பாதைகள் இப் பகுதியால் செல்வதால் பிரதான வீதியில் இருந்து கிராமத்திற்குச் செல்லும் வீதி தடைப்பட்டுள்ளது.

இந்த ரயில் றோட்ட கல்லுப் போட்டு நல்லா உயர்த்தி அமைச்சிருக்கிறாங்க. இதால சின்னன் சிறுசுகளும் வயது போனதுகளும் ஏறி இறங்கவே ஏலாது. பாதையை போட்டால் தான் கிராமத்துக்க போகலாம் என்கிறார் அக் கிராமத்தைச் சேர்ந்த கி.யோகராசா.

இதேவேளை, இக் கிராமத்தில் இருந்த மக்களின் பல கிணறுகள் மூடப்பட்ட நிலையில் உள்ளதுடன் தற்போது எஞ்சி இருக்கும் கிணறுகளுக்குள் இருந்தும் துர்நாற்றம் வீசுகின்றது. கிணறுகளுக்கு அண்மையில் செல்ல முடியாத நிலை காணப்படுவதுடன் கிணற்றுக்குள்ளும் கழிவுப் பொருட்கள் காணப்படுகின்றன. இந்த இடங்களை இராணுவத்தினர் பயன்படுத்தியதால் இக்கிணறுகளுக்குள்ளும் ஏதாவது இருக்குமா? என்ற அச்ச நிலை மக்களிடையே காணப்படுகின்றது.

யுத்தம் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், இன்று இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் மீள் குடியேற்றப்பட்டுவிட்டதாக அரசும், அரச தரப்பு அமைச்சர்களும் கூறி வருகின்ற நிலையில் ஒற்றாக்குளம் மக்களின் அவலநிலையானது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மீள் குடியேற்றத்திற்காக காத்திருக்கும் ஒற்றாக்குளம் மக்களையும் கவனத்தில் கொள்வார்களா?

-கே.வாசு-

# இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இந்தியப் பிரதமரை சந்திக்கத் திட்டம்

## -செந்தில் தொண்டமான்-



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளதாக ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமரை சந்திப்பது தொடர்பான கோரிக்கை ஏற்கனவே முன்வைக்கப் பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது இலங்கைத் தமிழர்களுடன் இணைந்து வாழ்கின்றபோதும் இந்திய வம்சாவளி தமிழர்களின் பிரச்சினை வித்தியாசமானவை. வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் காணி, பொலிஸ் அதிகாரங்களை கோருகின்றனர். மத்திய, சப்ரகமுவ, ஊவா மாகாண மக்கள் பெரும்பான்மை மக்களுடன் இணைந்தே வாழ்கின்றனர். அவர்கள் இந்த அதிகாரங்களைக் கோரவில்லை.

இலங்கைத் தமிழர்களுக்கு தலைவலிதான் இருக்கிறது. ஆனால், இந்தியத் தமிழர்களுக்கு வயிற்று வலி. இரு சமூகத்திற்கும் ஒரே மருந்து மாத்திரைகள் வழங்க முடியாது எனவும் அமைச்சர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

எஸ்.சந்திரமோகன்.

# கின்னஸில் இடம்பிடிக்கப் போகும் இலங்கையின் உக்கு அம்மா!

உலகிலேயே வயது கூடிய பெண் மணியென கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் தம்பெயரை பதித்திருந்த அமெரிக்காவை சேர்ந்த பெஷி கூபர் அண்மையில் காலமானதை தொடர்ந்து ஜப்பான் நாட்டை சேர்ந்த மியாசோ ஒக்கோவா 114 வயது பெண்மணிதான். உலகிலேயே வயது கூடிய பெண்மணியாக கின்னஸ் குழுவால் தெரிவு செய் யப்பட்டார். எனினும்

இலங்கையை சேர்ந்த "உக்கு அம்மாவே உலகின் வயது கூடிய பெண்மணியாக (116 வயது) கண்ட றியப்பட்டுள்ளார். பலன்கமுவே கெஹெல்பத்தல இல-82 இல் வசிக்கும் உக்கு அம்மா" 1897 இல் பிறந்தவர் என்றும் அவருக்கு 116 வயது என்றும் அறியப்பட்டுள்ளது. உக்கு அம் மா ஜப்பானை சேர்ந்த மியாசோவை விட 2 வயது கூடியவர் என்பதால் அவரை உலக சாதனை புத்தகத்தில் பதிவதற்கு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. உக்கு அம்மா 3 நூற்றாண்டுகளை கண்டவர் என்பது சிறப்பம்சமாகும்.

எம்.தாசன்




# சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம், தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையம் – ஹட்டன்

## புதிய பயிலுநர்களை அனுமதித்தல் ஜூலை - 2013

2013ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஆரம்பமாகவுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒரு வருட மற்றும் ஆறுமாத காலப் பயிற்சி நெறிகளில் புதிய பயிலுநர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 16 தொடக்கம் 23 வயது வரையிலான பாடசாலையை விட்டு விலகிய திருமணமாகாத இளைஞர், யுவதிகள் 28.06.2013 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

சகல பாட நெறிகளும் இலவசமாக தமிழ் மொழி மூலம் நடைபெறும். பெருந்தோட்டத் துறையிலுள்ள தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| இல் | பாடநெறி | கல்வித்தகைமை | காலம் |
|---|---|---|---|
| 01 | மோட்டார் வாகனம் பழுதுபார்த்தல் | க.பொ.த சாதாரண தரம் | ஒரு வருடம் |
| 02 | இயந்திரவியல் | க.பொ.த சாதாரண தரம் | ஒரு வருடம் |
| 03 | மின்னிணைப்பாளர் | க.பொ.த சாதாரண தரம் | ஒரு வருடம் |
| 04 | ரேடியோ டிவி திருத்துநர் | க.பொ.த சாதாரண தரம் | ஒரு வருடம் |
| 05 | கணணிப் பாவனைச் சான்றிதழ் | க.பொ.த/ உ/த | 6 மாதம் |
| 06 | செயலாளராண்மை பயிற்சி | க.பொ.த/ உ/த | ஒரு வருடம் |
| 07 | அலுமினிய வேலை | தரம் 9க்கு மேல் | 6 மாதம் |
| 08 | மோட்டார் சைக்கிள் பழுதுபார்த்தல் | தரம் 9க்கு மேல் | 6 மாதம் |
| 09 | காய்ச்சி இணைத்தல் | தரம் 9க்கு மேல் | 6 மாதம் |
| 10 | தச்சு வேலை | தரம் 9க்கு மேல் | 6 மாதம் |
| 11 | ஆடை தயாரித்தல் | தரம் 9க்கு மேல் | 6 மாதம் |
| 12 | வீட்டு மின்சார உபகரணங்களை திருத்துநர் | க.பொ.த. சாதாரண தரம் | 6 மாதம் |
| 13 | ஹோட்டல் பயிற்சிநெறி | க.பொ.த. சாதாரண தரம் | 6 மாதம் |

01. விண்ணப்பிக்கும் பாடநெறி :-..............................
02. முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) :-..............................
03. முகவரி (ஆங்கிலத்தில்) :-..............................
04. பிறந்த திகதி :-..............................
05. தொலைபேசி இல. :-..............................
06. தேசிய ஆளடையாள அட்டை இல. :-..............................
07. கல்வித்தகைமை (சான்றிதழ்களை இணைக்கவும்):-..............................

.............................................. ...............
விண்ணப்பதாரியின் கையொப்பம் திகதி

மாதிரி விண்ணப்பப்படிவம் (A-4 தாளில் தயாரிக்கவும்)

திட்ட முகாமையாளர்,
தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையம்,
ஹட்டன்.

The Project Manager,
Thondaman Vocational Training Centre
Hatton.

மேலதிக விபரங்களுக்கு 051-2223492 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புக்கொள்ளவும்.

# சிக்கல்களில் இருந்து சீக்கிரம் மீள..!

கௌதம புத்தர் மாபெரும் விஷயங்களைச் சொல்லும் விதம் மிகவும் எளிமையாகவும் அறிவுபூர்வமாகவும் இருக்கும். ஒரு சமயம் சீடர்களிடம் உரையாற்ற வரும் போது கையில் ஒரு துணியுடன் வந்தார். அவர்கள் முன் பேச அமர்ந்தவர் பேச்சைத் துவங்காமல் கையில் கொண்டு வந்திருந்த அந்தத் துணியில் முடிச்சுகளைப் போட ஆரம்பித்தார். மற்ற சீடர்கள் அவர் பேசக் காத்திருக்கையில் சாரிபுத்தன் என்கிற சீடன் மட்டும் அவர் செய்கையும் அவர் உரையின் ஒரு அங்கமே என்பதை உணர்ந்திருந்தான். அவன் உன்னிப்பாக அவர் செயலைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

விதவிதமாக சில முடிச்சுகளைப் போட்டு விட்டு தலை நிமிர்ந்த புத்தர் கேட்டார். இந்த முடிச்சுகளை விரைவில் அவிழ்க்க என்ன செய்ய வேண்டும்?

மற்றவர்கள் யோசித்துக் கொண்டிருக்க உடனடியாக சாரிபுத்தன் சொன்னான். குருவே! முடிச்சுகள் எப்படி போடப்பட்டுள்ளன என்பதை அறியாத வரை அவற்றை விரைவில் அவிழ்க்க வழியில்லை. முடிச்சு போடப்பட்ட முறையை அறிந்திருந்தால் மட்டுமே அதை விரைவில் அவிழ்க்க முடியும் .

புத்தர் சொன்னார். சரியாகச் சொன்னாய் சாரிபுத்தா. நினைவோடு போடப்படும் முடிச்சுகளை அவிழ்ப்பது எளிது. நினைவின்றி போடும் முடிச்சுகள் சிக்கலானவை. அவை சில சமயங்களில் அவிழ்க்க முடியாமலும் போகலாம். நம் வாழ்க்கையிலும் அப்படித்தான். விழிப்புணர்வு இல்லாமல் நம் வாழ்வில் ஏற்படுத்திக் கொள்ளும் சிக்கல்களில் இருந்து நாம் மீள வழி தெரியாமல் திண்டாடுகிறோம்


துணியில் போட்ட முடிச்சுகள் போட்ட விதத்திலேயே பிரிக்க சுலபமானவை. கவனத்துடன் போட்டிருந்தால் பொறுமையுடன் பிரிக்கலாம். இல்லாவிட்டால் பிரிக்க நாம் செய்யும் உத்திகளும் கூடுதல் முடிச்சுகளாகி விடும். கடைசியில் துணியையே கிழிக்காமல் முடிச்சுகளை அவிழ்க்க முடியாமல் போகும் நிலை கூட ஏற்படலாம்.

வாழ்க்கையிலும் அப்படித்தான். என்ன செய்கிறோம், ஏன் செய்கிறோம், எப்படி செய்கிறோம் என்கிற விழிப்புணர்வோடு செய்தால் தவறுகள் அதிகம் நிகழ வாய்ப்பே இல்லை. அப்படித் தவறுகள் நிகழ்ந்தாலும் அவற்றில் பெரும்பாலானவை விரைவிலேயே சரிப்படுத்திக் கொள்ள முடிபவையாகவே இருக்கும்.

ஆனால் விழிப்புணர்வில்லாமால் நம் வாழ்வில் செய்து கொள்ளும் சிக்கல்கள் ஆபத்தானவை. அந்தந்த நேர உந்துதல்களில் நாமாகவே ஏற்படுத்திக் கொள்பவை. உணர்ச்சிகளின் பிரவாகத்தில் தன்னிலை இழந்து என்ன செய்கிறோம் என்ற பிரக்ஞையே இல்லாமல் செய்து கொள்பவை. இந்தச் சிக்கல்களில் இருந்து மீளச் செய்யும் முயற்சிகள் பல சமயங்களில் சிக்கல்களை அதிகப்படுத்தி மேலும் குழப்பத்தை ஏற்படுத்தி விடும். பல சமயங்களில் பெரிய சேதாரத்தை ஏற்படுத்தாமல் சிக்கல்களில் இருந்து விடுபட முடியாது.

துணியின் முடிச்சுகள் அவிழ்க்க முடிந்த பின் துணி பழைய நிலைமைக்கே வரலாம். வாழ்க்கையின் சிக்கல்கள் அப்படி அல்ல. பல சமயங்களில் சிக்கல்கள் தீரும் போது வாழ்க்கை முன்பு போல திரும்பி மாற வாய்ப்பு இல்லை. எல்லாமே தலைகீழாக மாறிப் போகும் அபாயம் கூட உண்டு. மேலும் சிக்கல்கள் அனைத்தும் நாமே தான் செய்து கொள்ள வேண்டும் என்பதில்லை. பெரும்பாலான சிக்கல்களில் நம் பங்கு கண்டிப்பாக ஓரளவாவது இருக்கக் கூடும் என்றாலும், சில சமயங்களில் மற்றவர்களாலும் சிக்கல்கள் நம் வாழ்க்கையில் ஏற்பட்டு விடலாம்.

**வாழ்க்கைக்கு வழிசொல்லும் விழிப்புணர்வுத் தொடர் 37**



நம் செயல்களால் ஆனாலும் சரி, மற்றவர்கள் செயல்களால் ஆனாலும் சரி, விழிப்புணர்வோடு வாழ்க்கையை நடத்துபவன் வரும் சிக்கல்களை ஆரம்பத்திலேயே அடையாளம் கண்டு கொள்ள முடியும். அதனால் கவனமாகவும், வேகமாகவும், ஆரம்ப நிலையிலேயே, அவ்வப்போதே அவற்றைத் தவிர்க்கவோ, சரி செய்து கொள்ளவோ முடியும். விழிப்புணர்வு இல்லாத போதோ அவை பூதாகரமாகும் வரை கவனிக்கப்படுவதில்லை. பின் அதன் விளைவுகளில் சிக்கித் திண்டாட வேண்டி வரும். சில சிக்கல்கள் தீர்க்க முடியாமல் போகலாம், தீர்க்க முடிந்தாலும் மீதமுள்ள வாழ்க்கை நாம் இரசிக்க முடியாததாக மாறியும் போகலாம்.

எனவே விழிப்புணர்வோடு இருங்கள். என்ன வேண்டும் என்பதில் தெளிவாக இருங்கள். என்ன நடக்கிறது என்பதிலும் கவனமாக இருங்கள். கண்டிப்பாக நீங்கள் 90 சதவீத சிக்கல்களை விழுப்புணர்வோடு இருப்பதால் மட்டும் தவிர்த்து விட முடியும்.

## பொறுப்பு

ஒரு தோட்டத்தில் நிறைய குரங்குகள் இருந்தன. பல வருடங்கள் அங்கேயே இருந்ததால் தோட்டக்காரனுக்கும் அவை நண்பர்களாயிருந்தன. தோட்டக்காரன் செய்யும் காரியங்களைப் பார்த்துப் பார்த்து குரங்குகளும் அவற்றைச் செய்து விளையாடும்.

ஒருமுறை தோட்டக்காரன் பக்கத்து ஊருக்குப் போக வேண்டியிருந்தது. அப்போ தோட்டக்காரனுக்கு ஒரு ஐடியா தோன்றியது. தான் ஊருக்குப் போகும் காலத்தில் குரங்குகளை தோட்டத்துக்கு தண்ணீர் ஊற்றச் சொல்லலாமே என்று நினைத்தான்.

குரங்குகளை அழைத்து விஷயத்தைச் சொன்னான். குரங்குகளுக்கு சந்தோஷம். ஆனால், அவற்றுக்கு ஒரு பிரச்சினை. எந்தச் செடிக்கு எவ்வளவு தண்ணீர் ஊற்றுவது என்று தெரியவில்லை.

''அது ஒண்ணும் பெரிய பிரச்சினையில்லை. வேர் பெருசா இருந்தா நிறைய தண்ணீர் ஊத்துங்க. சின்ன வேரா இருந்துச்சுனா கொஞ்சமா ஊத்துங்க'' என்று யோசனை சொன்னான்.

வெளியூர் போய் திரும்பி வந்து தோட்டத்தப் பார்த்த தோட்டக்காரனுக்கு அதிர்ச்சி. அத்தனை செடிகளும் பிடுங்கப்பட்டு காய்ந்து கிடந்தன. ''என்னாச்சு?'' என்றான் தோட்டக்காரன்.

''வேர் பெருசா இருக்கா, சின்னதா இருக்கானு பார்க்கிறதுக்காக, செடியெல்லாம் பிடுங்கினோம்'' என்றன குரங்குகள்.

நீதி: புத்தியில்லாதவர்களிடம் பொறுப்பை கொடுப்பது, புத்தியில்லாத செயல்.

## வெற்றியின் இரகசியம்

வெற்றியாளர் ஒருவரை முறைத்து முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார் ஒருவர்.

முறைத்தவர் முகத்தில் எப்போதும் இறுக்கம். சிரிப்பே இல்லை.

தனக்கு அறிவுரை சொன்ன வெற்றியாளரிடம் வெறுப்புடன் கேட்டார்.

நீங்கள் வெற்றி பெற்றிருக்கிறீர்கள். எனவே மகிழ்ச்சியாய் இருக்கிறீர்கள். என்போல் தோல்வியைத் தழுவியிருந்தால் தெரியும். வெற்றியாளர் சொன்னார், இல்லை நண்பரே! நான் வெற்றி பெற்றதால் மகிழ்ச்சியாய் இல்லை. மகிழ்ச்சியாய் இருப்பதால் வெற்றி பெற்றேன்!

வெற்றியின் இரகசியம் வெளிப்பட்டது அன்று.

* பிரச்சினைகள் தாம் மிகப்பெரிய சாதனைகளையும் உறுதிமிக்க சாதனையாளர்களையும் உருவாக்குகின்றன. எனவே பிரச்சினைகளை விருப்பத்துடன் எதிர்கொள்ளுங்கள்.

# பயோ Data by உதயசூரியன்

பெயர் :- கணபதி கனகராஜ்

பதவி :- மத்திய மாகாண சபை உறுப்பினர்.

தற்போதைய தொழில்:- இ.தொ.காவை யாரும் எதுவும் சொல்லி விடாமல் (முந்திக்கொண்டு) வக்காலத்து வாங்குவது.

சமீபத்திய சாதனை :- மனோ கூட்டணியை, கொட்டகலையில் ஆர்ப்பாட்டம் செய்யவிடாமல் ஓடவைத்தது. (என்ன ஒரு வீராப்பு.....).

உங்கள் தலைவர் :- அன்று சதாசிவம், இன்று மாண்புமிகு கௌரவ அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் (சூப்பர்... அப்போ நாளை?).

ஒரே கவலை :- அன்று சம்பள ஒப்பந்தத்தை விமர்சித்து விட்டு இன்று இ.தொ.காவிற்கு "ஜால்ரா" அடிப்பதாக விமர்சிப்பது. (ஹி... ஹி.... உண்மை இல்லையா?)

ஒரே சந்தோஷம்:- நான் யாரை விமர்சித்து விட்டு யார் பக்கம் போனாலும் மக்கள் என்னை ஏற்றுக்கொள்வது... மக்கள் ரொம்ப நல்லவங்க... (தேர்தல் காலத்தில் புரியுமுங்க)

இலட்சியம்:- அவரின்(?) மனம் நோகாமல் நடந்து அமைச்சுப் பதவியொன்றை பெற்றுக்கொள்வது (சபாஷ்... என்ன அமைச்சு).

முன்னைய கட்சி தொடர்பாக:- அழிந்த கொல்லையிலே குதிரை மேய்ந்தாலென்ன கழுதை மேய்ந்தாலென்ன.

அரசியலில் கற்றுக்கொண்டது:- அறுபத்து நாலடி கம்பத்திலேறி ஆடினாலும் அடியிலிறங்கித்தான் காசு வாங்க வேண்டும்.. (ஓட்டும் அப்படித்தான்)

(யாவும் கற்பனை)



எம்.தாசன்

# பத்து வயது சிறுவனை துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய 18 வயது இளைஞன்!

## பொகவந்தலாவை பெற்றோசோ தோட்டத்தில் சம்பவம்



சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் நாளுக்குநாள் அதிகரித்து கொண்டே வருகின்றன. இவ்வாறான இழிவான செயல்களைத் தடுப்பதற்கு பல போராட்டங்கள், சட்ட நடவடிக்கைகள், விழிப்புணர்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தினாலும் இக் கொடுமைகள் குறைந்தபாடில்லை.

இன்று நாட்டில் எங்குபார்த்தாலும் ஆண், பெண் வேறுபாடின்றி பாடசாலை மாணவர்களே இவ்வாறான துஷ்பிரயோகங்களில் சிக்கித் தவிக்கின்றனர். இன்றைய நவீன சாதனங்களும் இவ்வாறான சம்பவங்களுக்கு துணை போவதாகவே இருக்கின்றன.

அந்தவகையில் பொகவந்தலாவை பகுதி தோட்டமொன்றில் பத்து வயது சிறுவனை 18 வயது இளைஞன் கடந்த சனிக்கிழமை மாலை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. சம்பவ தினம் சிறுவனின் பெற்றோர் தமது உறவினர் ஒருவருக்கு சுகயீனம் காரணமாக அவர்களின் இரண்டு பிள்ளைகளையும் வீட்டில் தனிமையில் விட்டுவிட்டு பலாங்கொடை பிரதேசத்திற்கு சென்றுள்ளனர்.

தனிமையில் இருந்த இரண்டு பிள்ளைகளில் ஒருவர் தனது மேலதிக வகுப்பிற்காக சென்றிருந்ததோடு, குறித்த சிறுவன் தனிமையில் விளையாடிக் கொண்டிருந்த நிலையிலேயே குறித்த இளைஞன் "வாங்க தம்பி விளையாடலாம்" எனக் கூறி தூக்கிச்சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக பாதிக்கப்பட்ட சிறுவன் காவல்த் துறையினருக்கு வழங்கி வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளான்.

இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொகவந்தலாவை காவல்த் துறையினர் குறித்த இளைஞனை கைதுசெய்துள்ளதோடு, அச் சிறுவனை பொகவந்தலாவை மருத்துவமனையில் அனுமதித்தனர்.

தொடர்ந்து 26 ஆம் திகதி குறித்த சந்தேகநபரை பொகவந்தவாலவை காவல் துறையினர் அட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியதோடு, குறித்த சந்தேக நபர் எதிர்வரும் 09 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அட்டன் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுவன் பொகவந்தலாவை மருத்துவமனையில் இருந்து மேலதிக மருத்துவ பரிசோதனைக்காக நாவலப்பிட்டி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


சா.சதீஸ்குமார்


அழகுக்கலை பயிற்சி
புதிய வகுப்புகள் ஆரம்பம்
❖ இப் பயிற்சியின் நோக்கம் வீட்டில் இருந்தவாறே உங்களின் அழகை மெருகூட்டிக் கொள்ளவும், உங்களுக்கென்றே ஓர் சுயதொழில் வாய்ப்பும்.
❖ 08 மாதத்தில் NVQ முறைப்படி முறையான பயிற்சி அளிக்கப்படும். (பயிற்சிக்கான பொருட்கள் அனைத்தும் இலவசம்)

தையல் Diploma பயிற்சி
இந்தியன் கட்டிங் 100% சுருக்கமற்றது
❖ 01 மாத 22 வகையான சாறி பிளவுஸ்
❖ 06 மாத பயிற்சி (சகலவிதமான ஆடைகளுக்குமான முறை)
❖ 01 மாத கால சல்வார் பயிற்சி, திரைச்சீலை

CSC கண்டி June: 2, 4 9.00 AM
நவோதயம் மாத்தளை June: 2, 3 1.30 PM 9.00 AM
PCS Lanka கம்பளை June: 1, 8 9.00 AM
மைசியம் Academy ஹட்டன் June: 1, 8 2.00 PM
STEPS 4th Mile Post Katugastota June: 3, 10 1.30 PM
என்றும் தரத்துடன் திருமதி ஷெரின்
077-5454002
077-5454110




## யாரது

✱ இவர் தமிழ்த் திரைப்பட நகைச் சுவை நடிகர்.
✱ இவர் நகைச்சுவையிலும் குணச்சித்திர நடிப்பிலும் பல சாதனைகள் படைத்தவர்.
✱இவர் 1000 திரைப்படங்களுக்கும் மேல் நடித்த பெருமைக்குரியவர்.
✱ இவர் சிவாஜிகணேசன், எம்.ஜி.ஆர், ஜெமினிகணேசன், முத்துராமன் போன்றோர்களுடன் பல படங்களில் நகைச்சுவை கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.
✱ கமலஹாசன் தயாரித்த அபூர்வச கோதரர்கள் படத்தில் கொடும் வில்லனாகவும் இவர் தோன்றினார். அதற்குப் பின் பல கமலஹாசனின் படங்களில் நடிக்க வாய்ப்புக் கிடைத் தது.
✱ இவருடைய மகனும் ஒரு நடிகர் ஆவார்.






1. இது எந்தத் திரைப்படத்தின் காட்சி?

**படத்தைப் பார்த்து விடையைச் சொல்லுங்கள் பார்க்கலாம்...**

## சிந்தனைத்துளி

✱ உலகின் குறைகளை பற்றிப் பேசாதே. குறைகளை நோக்கி வருத்தப்படு, எங்கும் நீ குறைகளைக் காண்பாய். ஆனால், நீ உலகுக்கு உதவி செய்ய விரும்பினால் உலகை தூற்றாதே, குறை சொல்லாதே. குறை சொல்லி உலகை இன்னும் பலவீனப்படுத்தாதே. உலகின் குறைகள், குற்றங்கள் எல்லாம் அதன் பலவீனத்தால் விளைபவை அல்லவா?

## வார்த்தைப் புதிர் - 61



### இடமிருந்து வலம்

01. அண்மைக்காலமாக பலரும் உலவும் இணையத்தளம்.
03. யோகத்தோடு கூடிய உடற்பயிற்சி.
06. கணிதக் குறியீடுகளில் ஒன்று.
11. செடி, கொடிகள் நிறைந்த பகுதி (குழம்பியுள்ளது)
13. இது பிளவுக்கு அறிகுறி.
19. ஆங்காரமான ஒரு பெண் தெய்வம்.
20. தமிழக முன்னாள் முதல்வர்களில் ஒருவர்.
24. இது நினைவுகளை மீட்டிப்பார்க்க உதவும்.

### வலமிருந்து இடம்

08. நெற்றியில் இடுவது.
09. வாரம்.
10. முனை.
12. கண்ணனின் துணைவி.
18. சமையலறையில் காணப்படும் ஒரு கருவி.
23. கதி.

### மேலிருந்து கீழ்

01. காகிதம் ஆங்கிலத்தில்.
02. தோள்பட்டை.
04. இதுவும் ஒரு கலை. (குழம்பியுள்ளது)
05. பல அல்ல
07. ஆண் ஆடு.
13. சமையலுக்கு பயன்படும். நிலத்துக்கு கீழ் விளையும் தண்டு.
17. இது இனிக்கும்.
22. இந்து சமயத்தின் ஒரு பிரிவு.

### கீழிருந்து மேல்

06. தோழன். 14. நிறைவு.
15. திடசங்கற்பம் என்றும் சொல்லலாம்.
16. ஓர் அணிகலன்.
23. பயிருக்குக் காவல்.
25. பலம்வாய்ந்த ஒரு ஊடகம் (குழம்பியுள்ளது).



போவத்தை இந்திரரத்ன தேரர்



# தீயினால் தீர்வா?

மதகுருமார்கள் என்பவர்கள் பற்றுக்களை ஒடுக்கியவர்கள். அதிலும் பௌத்த துறவிகளை நாம் சாதுக்கள் எனவும் அழைக்கின்றோம். சாதுக்கள் எப்போதும் அமைதியானவர்களாக அகிம்சையைப் போதிப்பவர்களாகவே காணப்படுவர். காணப்பட வேண்டும். அவர்கள் சாதாரண மனித உணர்வுகளுக்கு அடிமையாகக் கூடாது. அவ்வாறு அடிமையாகின்றவர்களை துறவிகள் என்று கூற முடியாது.

அமைதியான முறையில் தனது நியாயமான கோரிக்கையை வென்றெடுக்கப் போராடாது தனது மதம் சார்ந்த மிக முக்கியமான பண்டிகை நாளில் அனைவரையும் மனவேதனைக்குள்ளாக்கும்படி பௌத்த துறவியொருவர் தனக்குத்தானே தீ மூட்டித் தற்கொலை செய்து கொண்ட சம்பவமானது இன, மத, மொழி பேதமின்றி அனைவரையும் மிகுந்த வேதனையடையச் செய்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை உலகெங்கிலுமுள்ள பல்லாயிரக்கணக்கான பௌத்த மக்கள் வெசாக் பண்டிகையைக் கொண்டாடினார்கள். கௌதம புத்தர் பிறந்த மற்றும் அவர் ஞானம் பெற்ற பரிநிர்வாணம் அடைந்த இத் தினத்தை மிகவும் மகிழ்ச்சியாக அவர்கள் கொண்டாடிக் கொண்டிருந்த வேளையிலேயே அந்த வேதனைக்குரிய சம்பவமும் இடம்பெற்றது.

பௌத்தர்களின் புனித வழிபாட்டுத் தலமான கண்டியில் அமைந்துள்ள தலதா மாளிகைக்கு முன்னால் இந்த பௌத்த பிக்கு தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்ட சம்பவத்தை பலரும் அறிந்திருப்பீர்கள்.

போவத்தை இந்திரரத்ன தேரரே இவ்வாறு தனக்குத் தானே தீ மூட்டித் தற்கொலை செய்துகொண்டார். நாட்டு மக்கள் அனைவரும் வெசாக் வெளிச்சக்கூடுகளைப் பார்க்கச் செல்வதிலும் தானசாலைகளை நடத்துவதிலும் மும்முரமாக ஈடுபட்டிருந்த வேளையில் தேரரின் இந்த நடவடிக்கை நாட்டு மக்கள் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

புத்தரின் புனிததந்தம் வைக்கப்பட்டுள்ள பௌத்தர்களால் புனிதஸ்தலமாக மதிக்கப்படும் கண்டி தலதா மாளிகையின் முன்பாக போவத்தை இந்திரரத்ன என்ற இந்த தேரர் தான் அணிந்திருந்த ஆடையுடன் உடம்பில் பெற்றோலை ஊற்றி தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்டார். பலர் இச்சம்பவத்தை பார்த்து திகைத்து நின்ற அதேவேளை சிலர் புகைப்படம் எடுப்பதில் மும்முரமாக இருக்க ஒரு சிலர் மாத்திரமே அவரை காப்பாற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். இருந்தும் பயனில்லை. அவரது உடம்பில் அதிகமான பகுதிகளை தீ பதம் பார்த்து விட்டது.

அவர் உடனடியாக கண்டி பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். இவ்விடயம் உடனடியாக ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட போது அவரின் பணிப்புரைக்கமைய விசேட வானூர்தி (ஹெலிகொப்டர்) மூலம் மேலதிக சிகிச்சைக்காக கண்டி பொது வைத்திய சாலையில் இருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டார். உடம்பில் எல்லா இடங்களும் தீயில் கருகியதால் கொழும்புக்குக் கொண்டு வரப்படும்போது அவரது உடல் முழுவதும் (பெண்டேச்) கட்டுப் போடப்பட்டிருந்தது. கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த பிக்கு சிகிச்சை பலனின்றி மறுநாள் 25 ஆம் திகதி சனிக்கிழமை உயிரிழந்தார்.



பெல்மதுளை பிரதேச சபையின் முன்னாள் ஆளும் கட்சி உறுப்பினரான இந்திரரத்ன தேரர் பல கோரிக்கைகளை முன்வைத்தபோது அவை கவனத்திற் கொள்ளப்படாததாலேயே இந்த முடிவுக்கு வந்துள்ளார்.

* இறைச்சிக்காக மாடுகளை அறுப்பதைத் தடை செய்ய வேண்டும். * சமாதானத்தின் உரிமை மனிதர்களுக்கு மாத்திரமன்றி மிருகங்களுக்கும் இருக்க வேண்டும்.
* வற்புறுத்தி மதமாற்றம் மேற்கொள்வதற்கு எதிராக பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்.
* பெரும்பான்மை இனத்தவர்களின் மதம் சீரழிக்கப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.
* இது பௌத்த நாடு இதற்கேற்ற ஒரு யாப்பு வரையப்பட வேண்டும்.
* மதப் போரை ஒழிக்க வேண்டும்.

**இவை உயிரிழந்த தேரரின் கோரிக்கைகள்!**

என்பனவே அவரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளாகும். தனது கோரிக்கைகளை முன்வைத்து எழுதிய கடிதம் முன்னர் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டிருந்தது.

இவரது இச்செயற்பாட்டை அவர் முன்வைத்த கோரிக்கைகளை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வர மேற்கொண்டாரா அல்லது மக்களின் கவனத்துக்குக் கொண்டுவர மேற்கொண்டாரா என்ற கேள்வி தான் தற்போது எழுந்து நிற்கிறது.

இந்திரரத்ன தேரர் இதற்கு முன்னரும் பாதயாத்திரை போன்ற பல நடவடிக்கைகளை மேற்கொண்டு ஜனாதிபதியின் (மக்கள்) கவனத்தை தன்பக்கம் திருப்ப முயற்சித்துள்ளார்.

எப்படியோ தன் உயிரைக் கொடுத்து அவர் முன் வைத்த கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படுமா? அவரது உயிருக்கான மதிப்பு எவ்வளவு என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ஆனாலும் போவத்தை இந்திரரத்ன தேரரின் இச்செயற்பாடு மனித மனங்களை வேதனைப்படுத்தியுள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

பஹமுன அஸாம்

# இலங்கை தொடர்பான அறிக்கை ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்படுமா?

“காலத்துயரும் காலத்தின் சாட்சியும்” என்ற நூலின் வெளியீடு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை திருகோணமலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பிரபல அரசியல் ஆய்வாளர் யதீந்திராவின் கட்டுரைகளின் தொகுப்பாக அந்த நூல் அமைந்தது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் அகில இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் முதன்மை அதிதியாக கலந்து கொண்டார்.

திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை முதலாவது பிரதியை முதன்மை அதிதியிடமிருந்து பெற்று நூலை வெளியிட்டு வைத்தார்.

சம்பந்தன் அன்று தனது உரையில், முதல் தடவையாக வெளியிடுவதாகக் கூறி ஒரு தகவலை பகிரங்கமாகச் சொன்னார். 1984களில் அன்றைய ஜனாதிபதி ஜெயவர்தனாவை சம்பந்தன் சந்தித்தார். அப்போது ஜெயவர்தனா அன்றைய அரசியல் நிலைவரம் குறித்து சம்பந்தனுடன் உரையாடினார்.

“அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலாளர் கஸ்பர் வைன்போர்கர் இலங்கை ஊடக பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அப்போது இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியத் தலையீடு உருவான காலம். அமெரிக்க பாதுகாப்புச் செயலாளருடன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்தேன். இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடுகிறது. சில சமயம் இந்திய இராணுவத்தலையீடும் இடம்பெறலாம். இது பற்றிய தங்கள் கருத்து என்ன என்று அமெரிக்க பாதுகாப்புச் செயலாளரைக் கேட்டேன்.

அதற்கு அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் நிலைவரத்தை கண்காணித்துக் கொண்டு இருக்கின்றோம். நீங்கள் கவலை அடைய வேண்டியதில்லை என்று கூறினார். அமெரிக்க பாதுகாப்புச் செயலாளரின் பதில் எனக்கு ஏமாற்றத்தைத் தந்தது. ஆத்திரம் அடைந்தேன். அக்கணமே முடிவெடுத்தேன், இந்தியாவுடன் சேர்ந்து செயல்பட வேண்டும் என்று தீர்மானித்தேன்” என்று ஜெயவர்தனா தம்மிடம் தெரிவித்ததாக சம்பந்தன் கடந்த ஞாயிறு நடைபெற்ற கூட்டத்தில் முதல் தடவையாக தெரிவித்தார்.



அதனை அடுத்து மூன்று வருடங்கள் கழித்து 27 ஜூலை 1987 இல் இலங்கை - இந்தியா உடன்படிக்கை கைசாத்திடப்பட்டது. அதன் கீழ் மாகாண சபை முறைமை இனப்பிரச்சினைக்கு தீர்வாக அறிமுகப்படுத்தப்பட்டது. இப்பின்னணியில் இன்று சர்வதேச அரங்கில் இலங்கை தொடர்பாக இடம்பெற்று வரும் இராஜதந்திர நகர்வுகள் பற்றி ஆராய்வோம்.

முள்ளிவாய்க்கால் இறுதிக் கட்டயுத்தத்தில் இலங்கையில் அமெரிக்காவின் தூதராகக் கடமையாற்றியவர் ரொபட் பிளேக். யுத்தம் முடிவடைந்ததை அடுத்து, அமெரிக்க வெளியுறவு அமைச்சில் தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கான உதவிச் செயலாளராக பதவி ஏற்றிருந்த ரொபட் பிளேக் அடுத்த வாரம் இந்தோனேஷியாவில் அமெரிக்காவின் தூதராக பதவி ஏற்கவிருக்கின்றார். அவரின் இடத்தில் இந்தியாவில் பிறக்காத இந்திய வம்சாவளியில் வந்த பெண் ஒருவர் பதவி ஏற்கவிருக்கின்றார். அவரின் பெயர் நிஷா பிஸ்வால். இதுகாலவரை இந்தியாவின் தூதராக இலங்கையில் பணியாற்றி வந்த அசோக் காந்தா இந்தியாவின் வெளியுறவு அமைச்சில் தெற்கு மற்றும் ஆசியநாடுகளுக்கான உதவிச் செயலாளராக அடுத்த வாரம் பதவியேற்கின்றார். வியாழ மாற்றம், இலங்கை இனவிவகாரத்தில் ராஜதந்திரிகள் மாற்றமாக ஆரம்பித்துள்ளது.

இலங்கை-இந்திய உடன்படிக்கை கைசாத்திடப்பட்ட கால கட்டத்தில் இரு துருவங்களாக இருந்த அமெரிக்காவும் இந்தியாவும் இன்று இருபத்தாறு வருடங்களின் பின்னர் ஒன்றாக இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிக்கின்றன. உலகின் ஒரே ஒரு வல்லரசு என்ற நிலைப்பாட்டில் அமெரிக்கா எடுக்கும் முயற்சிக்கு மறுபேச்சின்றி ஆதரவளிக்க வேண்டிய நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டுள்ளது.

இக்கட்டத்தில் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் 23 ஆவது கூட்டத் தொடர் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. ஜூன் 14 வரை நடைபெறவிருக்கும் அமர்வின் போது ஐம்பது நாடுகளின் மனித உரிமைகள் நிலைவரம் பற்றி 100 அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. 21 விசேட அறிக்கையாளர்கள் இவ்வறிக்கைகளை சமர்ப்பிப்பர். 47 உறுப்பு நாடுகள் பங்கு பற்றும் இவ்வமர்வில் ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை உரையாற்றவுள்ளார். இவ்வமர்வில் இலங்கை தொடர்பான மனித உரிமை நிலைவரம் பிரஸ்தாபிக்கப்படமாட்டாது என்பதும் இலங்கை தரப்பிலிருந்து அமைச்சர் மட்டக் குழு பங்குபற்ற மாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2013 செப்டம்பர் மாதம் ஆரம்பமாகவிருக்கும் 24ஆவது ஜெனீவா ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை அமர்வின் போது இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பான முன்னேற்றம் பற்றி ஆராயப்படவிருக்கின்றது.


அதற்கு முன்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நாயகம் நவநீதம் பிள்ளை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் ஐந்துநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வரவிருக்கின்றார்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு நிலைவரம் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தி களநிலவரம் பற்றிய தகவல்களை சேகரித்துக் கொள்வார். இலங்கை தொடர்பான தனது அறிக்கையை நவநீதம்பிள்ளை பெரும்பாலும் 2014 மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் ஜெனீவா ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கலாம் என்பது அவதானிகளின் கருத்தாகும்.

எவ்வாறாயினும் இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் சர்வதேச அரங்கில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக எதிர்வரும் மாதங்களில் பேசப்படும். இதனிடையில் வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படுமா? பொதுநலவாய அமைப்பு நாடுகளில் உச்சிமாநாடு திட்டமிட்டபடி கொழும்பில் நடத்தப்படுமா? என்பது எல்லாம் பதில் காணவேண்டிய கேள்விகளாகவே இருக்கும்.

அநாமிகன்

# பல்லால் தேங்காய் உரித்து உலக சாதனை படைக்க விரும்பும் நபர்!



நான் என்ன வேலை வெட்டி இல்லாம தேங்காய் உரிச்சிக்கிட்டு இருக்கேனா என்று சிலர் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். ஆனால் தேங்காய் உரிப்பதிலேயே ஒரு உலக சாதனை நிலைநாட்டுவேன் என்ற உறுதியோடு அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் பனாமா நாட்டைச் சேர்ந்த 64 வயதான நபரொருவர்.

வேகமாக தேங்காய் உரித்து உலக சாதனை படைத்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடிக்க முயற்சித்து வருகின்றார். பனாமாவின் தலைநகரில் வசிக்கும் அன்ரிஸ் கார்டின் என்ற நபரே இவ்வாறு உலக சாதனை படைக்க முயற்சித்து வருகிறார்.



இது குறித்து கார்டின் கூறுகையில்; நீங்கள் நினைப்பது போன்று பல்லால் தேங்காய் உரிப்பது சாதாரண விடயமல்ல. அதற்கு உறுதியான தாடையும் பல்லும் வேண்டும். மேலும் கடவுளின் உதவியும் வேண்டும்.

தற்போது என்னால் 500 தேங்காய்களை 6 மணித்தியாலங்களில் முழுமையாக உரிக்க முடியும். இது சாதனை படைக்க போதுமானது. எனவே ஒரு நாள் நான் சாதனை படைத்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறுவேன் என நம்பிக்கையுடன் தெரிவித்துள்ளார்.

**உலகம் பேசுகிறது**

இச்சாதனையை நிலைநாட்டுவதற்காக சுமார் 50 வருடங்களாக 100 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தேங்காய்களை உரித்து பயிற்சி எடுத்துள்ளாராம் கார்டின். பயிற்சிக்காக இவர் தேங்காய் உரிப்பதை பலரும் கூடி வேடிக்கை பார்த்து புகைப்படமும் எடுத்து வருகின்றனர்.

## போகும் இடமெல்லாம் வீட்டை சுமந்து செல்பவர்!



சீனாவைச் சேர்ந்த ஒருவர் தான் வசிக்கும் வீட்டை தோளில் சுமந்து 435 கிலோமீற்றர் தூரம் நடந்துள்ளார். குவாங்ஸி மாகாணத்தைச் சேர்ந்த லியூ லிங்சாவோ எனும் இந்நபர் இடத்துக்கிடம் கொண்டு செல்லக்கூடியதாக மூங்கில் மற்றும் பொலித்தீனினால் தனது வீட்டை உருவாக்கியுள்ளார்.

60 கிலோ எடையுள்ள இந்த வீட்டை தான் போகுமிடமெல்லாம் சுமந்து செல்கிறார் 38 வயதான லியூ லிங்சாவோ. நான் எங்கு வேண்டுமானாலும் செல்ல முடியும். தங்குமிட பிரச்சினை எனக்கில்லை. நான் சுதந்திரமானவனாக உள்ளேன் என்கிறார் லியூ.

இவர் நடந்து செல்லும் போது வீதியோரங்களில் வீசப்பட்டிருக்கும் பிளாஸ்டிக் போத்தல்கள் முதலானவற்றையும் எடுத்து விற்பனை செய்தல், சூழலை சுத்தப்படுத்துவதன் மூலம் தனக்கு தேவையான வருமானத்தை தேடிக்கொள்கிறார்.

## இப்படியும் ஒரு சாதனை

புதிய சாதனைகள் நிகழ்த்துவது என்றால், சீனர்களுக்கு அல்வா சாப்பிடுவது மாதிரி. மிக கடினமான செயல்களைக் கூட, சர்வ சாதாரணமாக செய்து விடுவர். சீனாவைச் சேர்ந்த, லீ ஜின் என்பவரும், இந்த ரகம் தான்.

இவர், கூர்மையான, நீண்ட ஆணி மீது, தன் மொட்டைத் தலையை வைத்து, 10 விநாடிகள் தலைகீழாக நின்று, சாதனை புரிந்துள்ளார். சீனாவின் பாரம்பரிய சண்டை கலை நிபுணரான இவர், இதற்காக, பல மாதங்கள், பயிற்சி எடுத்துள்ளார்.

சாதனை நிகழ்த்திய அன்று, இரண்டு பேர் சேர்ந்து, லீயை, தலைகீழாக தூக்கி ஆணி மீது நிறுத்தினர். கடுமையான வலி ஏற்பட்டாலும் அதை வெளியில் காட்டாமல், இச்சாதனையை நிகழ்த்தி உள்ளார் லீ ஜின்.

சாதனையை முடித்தபின் அவரது மொட்டை தலையில் ஆணி குத்திய, கடுமையான பள்ளம் இருந்தது. மற்றப்படி அதிலிருந்து, இரத்தம் எதுவும் வராதது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பொதுமக்களுக்கு ஆச்சர்யத்தை ஏற்படுத்தியது.



## உலகின் மிகப் பெரிய சேவல்!



இங்கிலாந்திலுள்ள சேவல் ஒன்று விரைவில் உலகின் மிகப் பெரிய சேவலாக இடம்பிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கிலாந்தின் எசெக்ஸிலுள்ள மௌன்ட்பிட்சட் கெஸ்ல் பண்ணையில் வளரும் சேவல் ஒன்றே இவ்வாறு கின்னஸில் இடம்பிடிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. லிட்டில் ஜோன் எனப் பெயரிடப்பட்டுள்ள இச்சேவலின் நீளம் 66 செ.மீ. (26 இன்ச்) ஆகும். இந்த சேவல் குறித்து அதன் உரிமையாளரான (45 வயது) ஜெரமி கோல்ட்ஸ்மித் கூறுகையில்; சாதாரண சேவல்களுடன் ஒப்பிடுகையில் லிட்டில் ஜோன் மிக உயரமானது. மேலும் லிட்டில் ஜோன் கின்னஸில் இடம்பிடிக்க அதிக வாய்ப்புள்ளது. ஏனெனில் இதற்கு முன்னர் கின்னஸில் இடம்பிடித்துள்ள மெல்வின் என்ற சேவல் 60 செ.மீ. (24 இன்ச்) எனவே லிட்டில் ஜோன் கின்னஸில் இடம்பிடிக்கும் என நம்பிக்கையுடன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கின்னஸ் பேச்சாளர் ஒருவர் கூறுகையில்; குறித்த சேவல்களின் அளவீடுகள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் லிட்டில் ஜோன் கின்னஸில் இடம்பிடிக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

# என்னாச்சி...!

## இப்படியும் ஒரு இசை நிகழ்ச்சி தேவையா?

அண்மையில் தொலைக்காட்சியில் ஒரு இசை நிகழ்ச்சி காண்பிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. தமிழ்த் தொலைக்காட்சியொன்று வடக்கில் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. நிகழ்ச்சியைக் காண ஏராள மான கூட்டம் வந்திருந்தது. குறிப்பாக இளைஞர்கள் கூட்டம் அதிகமிருந்தது.

அந்த நிகழ்ச்சியைப் பார்த்து எங்களால் மகிழ முடியவில்லை. பாடகர்கள் பாடல்களைப் பாட பின்னால் நடனமும் ஆடினார்கள். நடன நிகழ்ச்சியில் பங்கேற்ற பெண்களின் ஆடைகளைப் பார்க்க சகிக்க வில்லை. அரைகுறை ஆடைகள் அணிந்திருந்தார்கள். பார்ப்பதற்கே படு கேவலமாக இருந்தது.

நானும் வடக்கைச் சேர்ந்த பெண்தான். ஒரு காலத்தில் ஒழுக்கத்திற்கும் தமிழ் கலாச்சரத்திற்கும் முன்னுதாரணமாக இருந்ததே வடக்கு பிரதேசம் தான். ஆனால் இந்த யுத்தத்திற்குப் பின் தாய்த் தமிழ் மண்ணில் அரைகுறை ஆடைகளுடன் பெண்களை ஆடவிட்டு வேடிக்கைகாட்டி பணம் சம்பாதிக்கிறார்கள்.

இதில் என்ன வேதனை என்றால் இவ்வாறு நடத்துபவர்கள் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தான். யுத்தத்தில் தமிழர்கள் அதிகம் இறந்திருக்கலாம். ஆனால் தமிழ்ப் பண்பாடும் கலாசாரமும் இன்னும் இறக்கவில்லை என்பதை நினைவிற்கொண்டு நல்ல நிகழ்ச்சிகளை நடத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.



## ஒப்பிடாதீங்க

நண்பரது மகனும், மகளும் ஒரு வகுப்பில் ஒன்றாகப் படிப்பவர்கள். பையன் படிப்பில் சுமார்தான். ஆனால் அவன் தங்கை கெட்டிக்காரி. ஒவ்வொரு முறை அவன் குறைவாக புள்ளிகள் வாங்கும்போதும், நண்பர் தன் மகனை கண்டபடி திட்டுவார். அத்துடன் தன் மகளை அவனுடன் ஒப்பிட்டு பேசுவார். ''உன் தங்கச்சியை பாரு, புள்ளிகளை அள்ளிக் கிட்டு வந்திருக்கா. தண்டம் நீயும்தான் இருக்கியே... நீயெல்லாம் பன்னி மேய்க்கக்கூட லாயக்கு இல்லாதவன்'' இப்படி மனம் நோகும்படி திட்டுவார்.

ஒரு முறை வகுப்பில் வாராந்தம் நடக்கும் பரீட்சையில் அவன் புள்ளிகள் குறைவாக வாங்கியபோது. நண்பர் கோபத்தில் ''உன்னைவிட வயசுல சின்னவ... அவ சிறுநீரை குடி. அப்பவாவது உனக்கு அறிவு வளருதானு பார்க்கலாம்'' என்று அவன் நண்பர்கள் முன்பு கத்தி விட்டார்.

அவமானம் தாங்காமல் அந்தப் பையன் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தான். நல்ல வேளை காப்பாற்றி விட்டார்கள்.

பிள்ளைகளது படிப்பில் அக்கறை காட்டுவதில் தவறில்லை. அதற்காக ஒப்பிட்டு பேசுவதும், தரக்குறைவான வார்த்தைகளில் அவர்களை திட்டுவதும் தவறு. இதை பெற்றோர்கள் உணரவேண்டும்.

## இது ரொம்பத் தப்பு

எனக்குத் தெரிந்த பெண் உமாவுக்கு கடந்த மாதம் ஆண் குழந்தை பிறந்தது. உமாவின் மாமியார் உமாவுக்கு உதவியாக அவளது வீட்டில் சில காலம் தங்கிச் செல்ல வந்தார்.

வந்த மறுநாள் குழந்தையை குளிப்பாட்ட தயாரானார். காலையில் குழந்தைமேல் ஏதோ எண்ணெய் தேய்த்தார், பின்னர் குழந்தையை குளிக்க வைக்கிறேன் என்ற பேயரில் அவர் செய்த அட்டகாசத்தை பார்த்து உமா அதிர்ந்து போனாள்.

சூடாக தண்ணீர் ஊற்றி உடலை அழுத்தித் தேய்க்க குழந்தை வீறிட்டு அலறியது. குழந்தையின் கைகளையும் கால்களையும் கண்டபடி உருவினார்.

குழந்தை வீறிட்டு அழ உமாவும் அழ ஆரம்பித்து விட்டாள். இருந்தாலும் மாமியார் ஆயிற்றே அவளால் எதுவும் செய்யமுடியவில்லை.

ஒருவாறு குழந்தையை குளிப்பாட்டி முடித்தார். கொடுமை அத்தோடு முடியவில்லை. குளித்தபின் குழந்தையின் பிஞ்சுக் கால்களைப் பிடித்து தலைகீழாக அப்படியும் இப்படியுமாக ஆட்டுவதும், குழந்தையின் கைகளை பிடித்து அந்தரத்தில் ஆட்டுவதும் பின்னர், மேலே தூக்கிப்போட்டு பிடிப்பதும் என்று குழந்தையை வதை செய்ய ஆரம்பித்து விட்டார். அதுமட்டுமா? குழந்தையின் வாயில் இரண்டு விரல்களை விட்டு அப்படியே அசால்டாக தூக்கினார். குழந்தையோ வீறிட்டு அழுதது.

இனியும் தாமதித்தால் குழந்தைக்கு ஆபத்து என நினைத்த உமா ஓடிச்சென்று குழந்தையை தூக்கிக்கொண்டாள்.

பிறந்து மூன்று நாள் ஆன பச்சிளங்குழந்தையை இப்படியா செய்வது என்று கேட்டபோது அதற்கு அவளது மாமி 'நானும் 4 பிள்ளைகள் பெற்றவள்தான். எப்படி குளிப்பாட்ட வேண்டும் என்று உங்களுக்கு என்ன தெரியும்' என்று உமாவை கண்டபடி திட்டினார்.

உமா படித்தவள் உடனே தனக்கு பிரசவம் பார்த்த வைத்தியரிடம் அழைப்பினை ஏற்படுத்தி இது தொடர்பாக கேட்டபோது;

ஐயோ இப்படியெல்லாம் செய்யக்கூடாது பிஞ்சி உடல் உயிருக்கு ஆபத்தினை ஏற்படுத்தும் என்று சொன்னார்.

மேலும் உமா இதுதொடர்பாக மாமிக்கு புரியவைத்தாள். அவரோ புரிந்துக் கொள்ள வில்லை. மாறாக தான் எத்தனை குழந்தைகளை குளிப்பாட்டியிருக்கிறேன் எனக்கு புத்தி சொல்ல வேண்டாம் என்று உமாவை கண்டப்படி திட்டினாள்.

இறுதியில் உமா என் குழந்தைக்கு ஆபத்து ஏற்படுத்தும் எந்த சொந்தமும் வேண்டாம் என்ற முடிவுக்கு வந்துவிட்டாள்.

உமா தைரியமாக செயற்பட்டதால் குழந்தையை காப்பாற்றிவிட்டாள். இன்னும் கூட வயதான பாட்டிமார்கள் இவ்வாறான செயல்களை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள்.



தினக்குரல்
Voice of Students
இலவச இணைப்பிதழ்
வெள்ளி தோறும்
விதயாதரம்
கல்வியால் ஆகாதது ஒன்றுமில்லை

மாணவர் முழுப்பெயர் : - ..........................................................

கல்வி கற்கும் பாடசாலை :- ..........................................................

மாணவர்கள் விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி
"கல்விக்குரல்" யாழ். தினக்குரல்,
இல. 336 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## பகுதி I
எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1 தொடக்கம் 38 வரையுள்ள வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

1) வேறுபட்ட அடைப்பின் கீழ்க் கோடிடுக.

| T E | S P | N M | R X |
|---|---|---|---|
| 1) | 2) | 3) | 4) |

2) பூச்சிகளின் சரியான வகைப்படுத்தல் எது?




A B C D E F

| 1) | 2) | 3) |
|---|---|---|
| AB | AC | AC |
| DE | BD | BF |
| CF | EF | DE |


3) பின்வரும் கூற்றுக்களால் விபரிக்கப்படும் உரு எது?

பல வண்ணங்களிலும் உண்டு
பற்பல நாடுகளிலும் உண்டு
பயத்தால் மட்டும் பறப்பேன்.
பல உணவுகளும் உண்பேன்.



1) 2) 3)

4) பின்வருவனவற்றுள் எந்த வடிவங்கள் சமவலுப் பின்னத்துக்குச் சமனான அளவுக்கு நிறந்தீட்டப்பட்டுள்ளது?




A B C D

1) AB 2) CD 3) BC

5) வெற்றிடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிக.





6) கீழே தரப்பட்ட வாக்கியங்களில் திருத்தமான வாக்கியம்

1. மரங்கள் பல முறிந்ததால் காற்று வீசியது.
2. காற்று வீசியதால் பல மரங்கள் முறிந்தன.
3. பல காற்று வீசியதால் மரங்கள் முறிந்தன.

★ வெற்றிடத்தில் வரவேண்டிய சொற்களைத் தெரிவு செய்க.

7) அது ............அழகிய குளம். அங்கு ............ ஆமை கரையில் குதித்தது.

1. ஓர், ஒரு
2. ஓர். ஓர்
3. ஒரு, ஒரு

8) பின்வரும் கூற்றுக்களை ஒழுங்குபடுத்தும்போது சம்பவம் ஒன்றைக் குறிக்கும் சரியான ஒழுங்குபடுத்தலை தெரிவு செய்க.

A) யன்னலூடாகப் பார்த்தேன்.
B) தபாற்காரன் நின்றான்.
C ) கடிதம் வாங்கினேன்.
D) மணி அடிக்கும் சத்தம் கேட்டது.
E) கதவைத் திறந்தேன்.

1. DAEBC
2. DABCE
3. DABEC

பிரபல ஆசிரியர் : திரு க. தவயோகராஜா (யாழ் கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம் )

**20) வாங்கில் வீணாவிற்கு வலப்பக்கத்தில் உள்ளவர்கள் எத்தனை பேர் ?**

1] 3

2] 2

3] 4

**21) வலப்பக்கக் கடைசியில் அமர்ந்திருப்பவர் யார்?**

1] கரிணி

2] தனு


3] யகி

**22) இப் பொதியிலுள்ள பொருள் பற்றி சரியான கூற்று.**

1] மீள் சுழற்சிக்கு உட்படுத்தலாம்.


2] உடையாது.

3] மழையிலிருந்து பாதுகாக்க வேண்டும்.



**★ இங்கு காட்டப்பட்டுள்ள 27 சிறிய சதுரமுகிகளாலான ஒரு பெரிய சதுரமுகியை அவதானித்து சரியான விடையைத் தெரிக**

23) பெரிய சதுரமுகியின் ஒவ்வொரு முகமும் 9 சிறிய சதுரங்களால் ஆனவை. எமது கண்ணுக்கு புலப்படும் மூன்று முகங்களுக்கு நிறந்தீட்டப்பட்ட முறை இங்கு காட்டப்பட்டுள்ளது. இவ்வுருவில் காட்டப்படாத ஏனைய மூன்று முகங்களில் நிறந்தீட்டப்பட்டுள்ளவை இங்கு காட்டப்பட்டுள்ள நிறந்திட்டப்படாத சதுரங்களுக்கு எதிராக உள்ள சதுரங்களாகும்.




பெரிய சதுரமுகியில் உள்ள ஆறுமுகங்களிலும் நிறந்தீட்டப்பட்ட சிறிய சதுரங்கள் எத்தனை?


1] 18


2] 27

3] 54


**24) பின்வருவனவற்றுள் எந்த உருவில் அதன் சமச்சீர்க் கோடுகள் காட்டப்படவில்லை.**


1. 


2. 

3. 

**25) பின்வருவனவற்றுள் எது நான்முகி ஒன்றின் வலையுருவாகும்.**


1. 


2. 


3. 


**26) பின்வரும் மூன்று உருக்களை ஒன்று சேர்க்கும் போது வரும் உரு எது?**








1. 

2. 

3. 

27) AB எனும் கட்டத்தினுள் வரவேண்டிய எண்கள் முறையே

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | → | 81 | ← | 43 |
| 33 | ← | 5 | → | 25 |
| A | → | 49 | ← | B |

1] 21, 7 2] 7, 23 3] 7, 21

28] மகுடம் , மனக்குடம் ,குடதிசை, குடம் ஆகிய சொற்கள் பின்வரும் குறியீட்டினால் குறிக்கப்பட்டுள்ளன.


KLAB , KRLAB , LAXZ , LAB இத் தொடர்புகளைக் கொண்டு திண் மம் என்னும் சொல் குறிக்கும் குறியீட் டினைத் தெரிவு செய்க

1. XBKR

2. XRBK

3. XRKB

**★ தொடக்கத்தில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோடுகள் வழியே வெட்டும் போது அவ்வடிவத்தை அடுத்துத் தரப்பட்டுள்ள துண்டுகளில் ஒன்று பொருத்தமற்றது. பொருத்தமற்ற துண்டின் கீழ்க் கோடிடுக**

29) 

1. 

2. 

3. 

4. 

## வினாத்தாள் - 02

## 1 மணித்தியாலம் 15 நிமிடம்

மாணவர் முழுப்பெயர் : - ..........................................................

கல்வி கற்கும் பாடசாலை :- ..........................................................

### பகுதி II

**கீழ்வரும் பந்தியை வாசித்து 1–8 வரையான வினாக்களுக்கு விடை தருக**

நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் பயன்படுத்தும் பொருட்டு அந்நாட்டு அரசினால் வழங்கப்படும் பொருள்கள், கட்டடங்கள், வாகனங்கள், நீர் வழங்கு குழாய்கள், நூல் நிலையங்கள், பூங்காக்கள் ,பொதுக் கிணறுகள் போன்றவற்றைப் பொதுச் சொத்து எனலாம். எமது பாடசாலையினால் எங்களுக்குக் கல்வி கற்பதற்கு வழங்கப்படும் பாடப்புத்தகங்கள் தளபாடங்கள் என்பவையும் பொதுச் சொத்துக்களுள் அடங்கும். நூல் நிலையங்களில் உள்ள நூல்களையும் பேணுதல் வேண்டும் . நான் கூறுவது சரி தானே! ஒருநாட்டுக்கு பெருமை தேடிக் கொடுப்பது அந்நாட்டில் வாழுகின்ற கல்வி மான்களே .ஆமாம் ஒரு நாட்டின் பெருமை அங்குள்ளவர்கள் கல்வியிலே தங்கியுள்ளது.அத்தகைய பெருமையை ஈட்டிக்கொடுப்பதற்குக் காரணமாக அமையும் நூல்களை நாம் கண்போல போற்றுவது எமது கடமையாகும். எனவே நூல் நிலையங்களில் காணப்படும் நூல்களைக் கிழிக்காமல் பக்குவமாகப் பயன்படுத்தி அவற்றால் மற்றவர்களுக்கும் பயனடையச் செய்தல் வேண்டும். மக்கள் தத்தம் அன்றாடக் கடமைகளை முடித்து விட்டுக் களைக்கும் வேளையிலே தாம் மன அமைதி பெறவும் ஆறுதலடைவதற்கும் அண்மையிலே காணப்படுகின்ற பூங்காக்களை நாடிச் செல்வார்கள். இப்பூங்காக்கள் அவர்கள் மனதிற்குக் குதூகலத்தையும் ஆறுதலையும் அழிக்கும் ,ஆனாலும் உங்களைப் போன்ற சிறுவர் சிறுமியர்கள் விளையாடி மகிழ்ந்திருப்பதற்கும் பூங்காக்கள் உதவுகின்றன அல்லவா?

1. களைத்திருக்கும் மனதிற்கு ஆறுதல் பெற செல்லும் இடம் எது ?

______________________________

2. இப்பந்தியில் வலியுறுத்தி கூறப்படுவது என்ன?

______________________________

3. பொதுச் சொத்து என்றால் என்ன?

______________________________

4. தத்தம் எனும் சொல்லைப் பிரித்து எழுதுக?

______________________________

5. இப்பந்தியில் குறிப்பிடப்படும் உவமானத்தை எழுதுக.

______________________________

6. கோடிட்ட வாக்கியத்தின் எழுவாயை எழுதுக.

______________________________

7. ஒரு நாட்டிற்கு பெருமை தேடிக் கொடுப்பது எது.

______________________________

8. **"கவனமாக"** என்ற சொல்லின் சம கருத்துச் சொல்லொன்றைத் தெரிவு செய்து எழுதுக.

______________________________

★ **பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**

9. இலக்குமணா என்ன திகைத்துப் போய் நிற்கிறாய்

10. வானம் கறுத்தது இடி முழங்கியது மின்னல் மின்னியது சோவென மழை பெய்தது

★ **பின்வரும் தொடர் வாக்கியங்களை தனிவாக்கியங்களாக எழுதுக.**

11. லூயிபாஸ்டர் பட்டங்களும் பதக்கங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்

1) ______________________________

2) ______________________________

★ **பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வசனம் எழுதுக.**

12. தலையசைத்து / எம்மை / நெல்லினங்கள் / கதிர் / வரவேற்கும் / சுமந்த

______________________________

13. eyes /us / the / to /see / help

______________________________

★ **பின்வரும் சொற்றொடர்களின் கருத்தை எழுதுக**

14) கையை விரித்தனர்

______________________________

15) பொன்றாத செல்வம்

______________________________

16) சின்னஞ்சிறிய

______________________________

10) கனிப் பொருள்கள் அதிகமுள்ள உணவு வகை

1) பால் 2) பச்சை இலைக்கறி

3) மஞ்சள் மரக்கறி 4) இறைச்சி

11) 

இப்பறவை பற்றிய தவறான கூற்று

1) இரவில் நடமாடும்
2) பயிர்களுக்கு நன்மை செய்யும்
3) பயிர்களுக்குத் தீமை செய்யும்
4) மாமிச உண்ணி

12) 


இப் படத்தில் உள்ளவர்

1) அநாகரிக தர்மபால
2) கலாநிதி. D.B. ஜயா
3) ஆனந்த குமாரசுவாமி
4) ஆதர் சி. கிளார்க்

13) இவ்வுரு எப்பிராணி போல் செல்வதைக் காட்டுகிறது



1) நண்டு நடை
2) பூனை போல் செல்லுதல்
3) கரடி போல் செல்லுதல்
4) மயிர்க்கொட்டிபோல் செல்லுதல்

14) 


இவ் உபகரணம் குறிப்பது

1) திசைகாட்டி 2) அனிலோமானி
3) காற்று வேகமானி 4) காற்றுத் திசைகாட்டி

15) பின்வரும் தாவரங்களில் ஆணி வேர் கொண்ட தாவரம் எது?

1) கொய்யா 2) நெல்
3) பப்பாசி 4) வாகை

16) உணவுச் சமிபாட்டை துரிதப்படுத்துவது ?

1) புரதம் 2) காபோவைதரேற்று
3) பழங்கள் 4) கொழுப்பு

17) இலங்கைக்கே உரிய தாவரம் எது?

1) மாமரம் 2) தென்னை
3) எண்ணெய்மரம் 4) மாதுளை



18) பின்வரும் மாவட்டங்களில் வடமேல் மாகாணத்திற்குரியது எது?

1) பொலநறுவை 2) காலி
3) வவுனியா 4) புத்தளம்

19) அதிக சூரிய ஒளியில் வளர விரும்பும் தாவரம் அல்லாதது எது?

1)நெல் 2) அந்தூரியம்
3) தென்னை 4) மிளகாய்


20) வட திசையை அறிய உதவும் உடுத் தொகுதி எது?

1)  2)  3)  4) 

21) சூழல் நேயப் பூச்சிக் கட்டுப்பாட்டுத் திரவமாகப் பயன்படுத்துவதற்கு மிகச்சிறந்தது எது?

1)தேங்காய் எண்ணெய் 2) வேப்பெண்ணெய்
3) கொதித்தாறிய நீர் 4) சிற்றினெல்லா எண்ணெய்

22) பின்வரும் பூச்சி இனங்களுள் மனிதனுக்கு நன்மையும் தீமையும் தரும் பூச்சி இனம் எது?

1)  2)  3)  4) 

23) மண்ணரிப்பை ஏற்படுத்தும் ஒரு காரணி அல்லாதது

1) காற்று 2) நீர்
3) விலங்குகள் 4) தாவரங்கள்

24) சூரிய நமஸ்காரச் செயற்பாட்டில் மூன்றாவது படி நிலை எது?

1)  2)  3)  4) 

25) தாவரங்கள் உணவு தயாரிக்க அவசியமானவையாகக் கொண்ட தொகுதி

1) காபனீரொட்சைட் ,சூரியஒளி, பசளை
2) நீர் ,ஒட்சிசன் , காற்று
3) காபனீரொட்சைட் , நீர் , சூரியஒளி
4) அளவான வெப்பம் ,ஒட்சிசன் ,நீர்



26) இக்குறியீடு குறிப்பது

1) இலங்கை தபால் சேவை
2) இலங்கை தர நிர்ணய மன்றம்
3) இலங்கை மின்சார சபை
4) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

27) இறக்கை இல்லாத பறவை

1) கிவி 2) கெனட் 3) மயில் 4) மரஅணில்

28) தச்சு வேலை செய்வோர் பயன்படுத்தும் உபகரணம் அல்லாதது

1)  2)  3)  4) 

29) தாவர உணவுகளில் ஒன்று

1) பட்டர் 2) மாஜரின் 3) மீனெண்ணை 4) மாசி

30) **"கொலாஜ்"** என்பது

1)ஆக்கவேலை 2) பன்னவேலை
3) களிவேலை 4) ஒட்டு வேலை



# அழகு..,
உடல் நலம்..,
குழந்தை வளர்ப்பு..,
சாதனை மகளிர்..,
ஆலோசனை..,
உளவியல்..,

# சிநேகிதியே

## டிப்ஸ்

*வீட்டில் பொரியல் செய்யும் போது கிழங்கு வகைகளைத் தவிர மற்ற காய்களை நறுக்கியவுடன் தேவையான கல் உப்பைத் தூவி சிறிது நேரம் ஊறவிட்டு, பிறகு வதக்கினால் காய்கள் எளிதில் வெந்துவிடும். அதன் நிறமும் மாறாமல் இருக்கும்.

*இட்லி மிருதுவாகவும் ருசியாக இருக்க...

இட்லிக்கு அரிசி ஊற வைக்கும்போது, அத்துடன் சிறிது அவல் சேர்த்து ஊறவையுங்கள். இட்லி மிகவும் மிருதுவாக இருக்கும்.

*பாயாசத்திற்கு திராட்சைக்கு பதிலாக பேரிச்சம் பழத்தை பொடியாக நறுக்கி வைத்து நெய்யில் பொரித்து போட்டால் சுவையாக இருக்கும்.

* காரட்டின் தலைப்பகுதியை சிறிது நறுக்கி விட்டு காற்று புகாத பொலிதின் பைகளில் போட்டுவையுங்கள். நீண்ட நாட்களுக்கு கரட் பசுமையாக உலராமல் இருக்கும்.

* பசலைக்கீரை மற்றும் பச்சை காய்கறி, கீரைவகைகளைச் சமைக்கும் போது சிறிது சர்க்கரை சேர்த்து சமையுங்கள். சமைத்த பின்னும் அவற்றின் பச்சை நிறம் மாறாமல் இருக்கும்.



# பட்டுப்போன்ற கூந்தல் வேண்டுமா ?

பொதுவாக பெண்களுக்கு இருக்கும் அழகுப் பிரச்சினைகளில் முக்கிமான பிரச்சினை முடி கொட்டுவதுதான். அதற்கு பல காரணங்கள் இருந்தாலும் வரண்ட முடி ஒரு முக்கிய காரணம். இதை எப்படி சரிசெய்யலாம்?

இரசாயனப் பொருட்கள் நிறைந்த ஷாம்புக்களை தலையில் நேரடியாக போட்டு அழுத்தித் தேய்க்கும் போது வியர்வைத் துவாரங்களை அந்த இரசாயனப் பொருட்கள் அடைத்து விடும். அதனால் நம் மண்டை ஓட்டில் இருக்கும் ஈரப்பதம் குறைந்து முடி வரண்டு போய் சிக்கு விழ ஆரம்பிக்கும். அப்புறம் முடி அதிகம் கொட்டும்!

முடி வரண்டு போகாமல் இருக்க என்ன செய்யணும் தெரியுமா? எப்போதும்தலைக்குக் குளிக்கும் முன் தலையில் எண்ணெய் வைத்து சீப்பு போட்டு வாரிய பின் 10 நிமிடம் ஊற விடணும். பின்னர் ஷாம்பூவை நேரடியாக தலையில் பயன்படுத்தாமல் கைகளில் எடுத்து கொஞ்சம் தண்ணீர் கலந்து தலையில் தேய்த்துக் குளிக்க வேண்டும். தலைக்குக் குளித்த பிறகு சிக்கு விழாமல் இருக்க ஒரு இயற்கைக் கண்டிஷனரான செம்பருத்தி தூள்செய்து சிறிது தண்ணீர் விட்டுக் கலந்து முடியில் கண்டிஷனர் போல் போட்டு சிறிது நேரம் விட்டு முடியை அலசினால் முடி வரண்டு போகாமல் இருக்கும். சிக்கும் விழாது.

சரி செம்பருத்தி தூள் தயாரிப்பது எப்படி தெரியுமா? ஒற்றை அடுக்கு சிவப்பு செம்பருத்தியையும் அதன் இலைகளையும் நிழலில் உலர்த்தி பொடி செய்தால் செம்பருத்தி தூள் தயார்.

**செம்பருத்தி பூவின் மகத்துவம் பற்றி உங்களுக்குத் தெரியுமா?**

செம்பருத்தி இலையை அரைத்து தலைக்கு தேய்த்து குளித்து வந்தால் முடி பட்டுப்போன்று மென்மையாக மாறிவிடும். பளபளப்பு கூந்தலுக்கு ஷாம்பே கதியென்று கிடக்கும் பெண்கள், அதற்கு மாற்றாக இதை பயன்படுத்தலாம். இதேபோல், 2 அல்லது 3 செம்பருத்திப் பூக்களை ஒரு டம்ளர் நீர்விட்டு காய்ச்சி வடிகட்டி எடுத்துக்கொண்டு, அதனுடன் சிறிது சர்க்கரை சேர்த்து தினமும் குடித்து வந்தால் ரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் அளவு அதிகரிக்கும்.

சிலருடைய தலையில் பொடுகு, பேன், ஈறு தொல்லைகள் அதிகமாக இருக்கும். இவர்கள் எவ்வளவுதான் மருந்துகள், ஷாம்புகள் உபயோகித்துப் பார்த்தாலும் அவர்கள் முழுமையாக இந்த தொல்லையிலிருந்து விடுபட முடிவதில்லை. இதற்கு அருமையான மருந்து செம்பருத்திதான்.

செம்பருத்தி இதழ்களை நிழலில் உலர்த்தி எடுத்து வெந்தயப்பொடி, கறிவேப்பிலைபொடி கலந்து எண்ணெயில் கொதிக்க வைத்து எடுத்து தினமும் தலைக்குத் தேய்த்து குளித்து வந்தால் தலைமுடி உதிர்தல் நீங்கி, முடி நன்கு வளரும்.

செம்பருத்திப் பூக்களைப் பறித்துத் தலையில் வைத்துக் கட்டிக்கொண்டு இரவு படுத்துக் கொள்ளவும். இதுபோன்று மூன்று நான்கு தடவைகள் செய்தால் தலையிலுள்ள பேன்கள் ஒழிந்துவிடும்.



# மாத விலக்கு பிரச்சினையா?

மணத்தக்காளிக் கீரை - 1 கைப்பிடி
கொத்தமல்லி விதை - 1 ஸ்பூன்
சீரகம் - 1தேக்கரண்டி, சோம்பு - 1 தேக்கரண்டி
இஞ்சி - 1 துண்டு, பூண்டு - 4 பல்
சின்ன வெங்காயம் - 3, வெற்றிலை - 2
மிளகு - அரை தேக்கரண்டி

இவைகளை எடுத்து தண்ணீர் விட்டு சூப் மாதிரி செய்து தேவையான அளவு உப்பு சேர்த்து காலையிலும் மாலையிலும் சாப்பாட்டுக்கு முன்போ பின்போ சாப்பிட்டுவர வேண்டும். மாத விலக்கு நேரத்தில் 10 நாட்களுக்கு முன் 3 மாதத்திற்கு தொடர்ந்து இதை சாப்பிட்டு வந்தால் மாதவிலக்கு பிரச்சினை காணாமல் போய்விடும்..

இந்த சூப்பை சாதாரண நாட்களில் கூட மற்ற பெண்களும் சாப்பிடலாம். இது உடம்புக்கு நல்ல ஆரோக்கியத்தைத் தரும்..

* முடக்கத்தான் கீரைச் சாற்றில் கறுப்பு எள்ளை அரைத்துச் சாப்பிட்டால் மாதவிலக்கு உண்டாகும்.

* மாதவிலக்கின்போது இரத்தப்போக்கு அதிகமாக இருக்கும்போது பண்ணைக் கீரையை சமைத்துச் சாப்பிட்டால், அதிகப்படியான இரத்தப்போக்கு கட்டுப்படும்.



# இது அம்மாக்களுக்கு

## இதைப் படியுங்க!

1.கர்ப்பிணி பெண்கள் நான்கு மாதங்கள் வரை ஒரு நாளைக்கு 6 டம்ளர் பால் அருந்த வேண்டும். இது குழந்தைக்கு தேவையான கல்சியம் இதில் குழந்தைக்கு கிடைத்து விடும்.

2. தலைவலி, காய்ச்சல், சளி, பல் வலி போன்றவைக்கு வைத்தியரிடம் கேட்காமல் எந்த மாத்திரையும் சாப்பிட வேண்டாம்.

3. சூடு தன்மை உள்ள பழங்கள் காய்கள், உணவுகள் அதிகம் சாப்பிடக் கூடாது

4. சாப்பிட கூடாத பழங்கள், கொய்யா , பப்பாளி, அன்னாசி, கறுப்பு திராட்சை.

5. தினம் சாப்பிட வேண்டிய பழங்கள்
அப்பிள், பச்சை திராட்சை,மாதுளை, ஓரேஞ்ச்

6. இறால், கோழியிறைச்சி, மாட்டிறைச்சி போன்றவை கூட ரொம்ப சூடு இதெல்லாம் கூட தவிர்ப்பது நல்லது.

7.இரும்புச் சத்துள்ள கீரைகளை அதிகம் உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

9. நெல்லிக்காய் நிறைய வாங்கி சர்க்கரை பாகு காய்ச்சி அதில் நெல்லிக்காயை வேகவைத்து பாகில் ஊறவைத்து தினம் ஒன்று சாப்பிடலாம்

## பாடல்



படம்: மரியான்
இசை: ஏ.ஆர். ரஹ்மான்
பாடல்வரிகள்: கபிலன்
பாடியவர்கள்: விஜய் பிரகாஷ், ஸ்வேதா மோகன்

இன்னும் கொஞ்சம் நேரம் இருந்தா
தான் என்ன
ஏன் அவசரம் என்ன அவசரம் நில்லு
பொண்ணே (4)

இன்னும் பேசக்கூட தொடங்கலையே
நெஞ்சமும் கொஞ்சமும்
நிறையலையே
இப்போ என்ன விட்டு போகாதே
என்ன விட்டு போகாதே
இன்னும் பேசக்கூட தொடங்கலையே
நெஞ்சமும் கொஞ்சமும் நிறையலையே
இப்போ மழை போல நீ வந்தா கடல்
போல நான் இருப்பேன்

(இன்னும் கொஞ்ச நேரம்)

இதுவரைக்கும் தனியாக என் மனச
அலையவிட்ட அலையவிட்ட..
அலையவிட்டாயே
எதிப்பாரா நேரத்துல இதயத்துல
வளையவிட்டு வளையவிட்டு..
வளையவிட்டாயே
நீ வந்து வந்து போயேன் அந்த
அலைகளை போல
வந்து உன் கைல மாட்டிக்குவேன்
வளையல போல
உங் கண்ணுக்கேத்த அழகு இது
காத்திருடாகொஞ்சம்
உன்ன எப்படியே தந்தாலும் தித்திக்குமே
நெஞ்சம்

இன்னும் கொஞ்சம் காலம் பொறுத்தா
தான் என்ன
ஏன் அவசரம் என்ன அவசரம் சொல்லு
கண்ணே (2)

கடல் மாதா ஆடையாக உயிரோடு
உனக்காக காத்திருப்பேன் காத்திருப்பேன்
என் கண்ணு ரெண்டும் மயங்குதே
மயங்குதே
உள்ளிடம் சொல்லவே தயங்குதே
இந்த உப்பு காத்து இனிக்குது
உன்னையும் என்னையும் இழுக்குது
உன்ன இழுக்க என்ன இழுக்க
என் மனசு நிறையுமே
இந்த மீன் உடம்பு வாசனை
என்ன நீ தொட்டதும் மணக்குது
இந்த இரவெல்லாம் நீ பேச தலையாட்டி
நான் இரசிப்பேன்

(இன்னும் கொஞ்ச நேரம்)

நீ என் கண்ணுபோல இருக்கணும்
என் புள்ளைக்கு தகப்பன் ஆகணும்
அந்த அலையோரம் நம்ம பசங்க கொஞ்சி
விளையாடணும்
நீ சொந்தமாக கிடைக்கணும்
நீ சொன்னதெல்லாம் நடக்கணும்
நம்ம உலகம் ஒன்னு இன்னு நாம்
உருவாக்கணும்



## இயக்குநர் ஆசையில் சித்தார்த்!

உதயம் என்.எச்4 ஓடவில்லை என்றாலும், ''தீயா வேலை செய்யணும் குமாரு'' படத்தை ரொம்பவே நம்பிக் கொண்டிருக்கிறார் சித்தார்த். இந்தப் படத்திற்கு பின், தமிழில் தன் மார்க்கெட் சூடு பிடித்து விடும் என்பவர், அதன் பின் கோலிவுட்டில் தானும் பேசப்படும் நடிகராகி விடுவேன் என்கிறார். அப்படி தனக்கென ஒரு இடம் கிடைத்தபின் தன் சொந்தக் கதையில் ஒரு படத்தை தானே இயக்கி நடிப்பேன் என்கிறார் சித்தார்த்.



திரைக்கு...
மகன் ...
இயக்...
அரசி...
இ...

## ஒரே பாடலில் நடித்த 18 பிரபலங்கள்!

கருணாஸ், ஷெரில் பிரிண்டோ ஜோடி சேர்ந்துள்ள படம், மச்சான். இப்படத்தில், இடம் பெறும் ஒரு பாடலில் பார்த்திபன், எஸ்.ஜே.சூர்யா, பரத், விமல், ஸ்ரீகாந்த், விதார்த், விஜய் சேதுபதி, கிருஷ்ணா, சாந்தனு, சிவா, கோவை சரளா, விஜய் ஆண்டனி, சத்யன், சூரி, திரு, தம்பி ராமையா, பவர் ஸ்டார், ஸ்ரீகாந்த் தேவா ஆகியோர் தோன்றி, நடனமும் ஆடியுள்ளனர். இதில் சிவா, நடித்ததற்கான கூலியே பெறவில்லை.



## தீவிர முயற்சியில் காஜல்

துப்பாக்கி ஹிட்டுக்கு பின் கோலிவுட்டில் பேசப்படும் நடிகையாகி விட்ட காஜல் அகர்வாலுக்கு, சமந்தா, அமலா பால், அஞ்சலி போன்ற நடிகைகளின் ஆதிக்கம் காரணமாக தற்போது தெலுங்கு மார்க்கெட் சரிவில் உள்ளது. அதனால், தமிழில் அதிரடியாக பிரவேசித்து, மார்க்கெட்டை கைப்பற்ற திட்டம் தீட்டி வருகிறார். விஜய்யுடன் ஜில்லா படத்தில் நடிப்பவர், அஜீத், சூர்யா போன்ற நடிகர்களுடன், நடிக்கும் வாய்ப்பினை பெறவும், திரைக்குப் பின்னால் தீவிர முயற்சியை முடுக்கி விட்டுள்ளார்.

# சினிமா





## ஈகோ இல்லாத பூர்ணா

இரண்டு ஹீரோயின்கள் ஒரு படத்தில் நடித்தாலே, அங்கே ஏதாவது ஒரு ரூபத்தில், ''ஈகோ'' போர் வெடித்து விடும். ஆனால், பூர்ணா மற்ற நடிகைகளுடன் இணைந்து நடிக்கும் படங்களில், அப்படி நடப்பதில்லை. காரணம், மற்றவர்கள் தன் மீது, ''ஈகோ'' பார்வை வீசி, வம்புக்கு இழுத்தாலும் அதைக் கண்டு கொள்வதில்லை பூர்ணா. எனக்கு கொடுக்கப்பட்ட வேலையை நான் செய்கிறேன். இதில், நான் பெரிய நடிகை, நீ பெரிய நடிகை என்று சொல்வதில், எந்த அர்த்தமும் இல்லை என்று பேசி உடன் நடிக்கும் மற்ற நடிகைகளையும் யோசிக்க வைக்கிறார்.

பொதுவாக, யார...
வெளியானால், அவரின் ம...
வழக்கம். ஆனால் அஞ்சலி...
பற்றி வெளியான சர்ச்சை...
பாதிக்கவில்லை. ஆனால்,
தெலுங்கில் அவரது...
இவர் அறிமுகமானதே, தெ...
திரையுலகம், அஞ்சலியை...
வாய்ப்புகளை வழங்கி வந்...
மொத்த ஆந்திர ரசிகர்களு...
சம்பளத்தையும், தடால...
படத்துக்கு, 20 இலட்சம் ரூ...
கால்ஷீட் கேட்டால் ஐந்து...

## அரசியல் படமெடுக்கும் கே.பாக்கியராஜ்!

...ரக்கதை மன்னன் என்று பெயரெடுத்த போதும், தன் மகள் சரண்யாவை வைத்து இயக்கிய, பாரிஜாதம், ...ன் சாந்தனுவை வைத்து இயக்கிய சித்து ப்ளஸ் 2 ஆகிய படங்கள் தோல்வியடைந்ததால், அதன் பின் படமே இயக்காமல் இருந்தார் கே.பாக்கியராஜ். ஆனால், இப்போது தன் வழக்கமான குடும்ப செண்டிமென்டை கடந்து அரசியலை நையாண்டி செய்யும் வகையில், ''துணை முதல்வர் அன்னப் போஸ்ட்'' என்றொரு படத்தை இயக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பாக்கியராஜ், அதில் நடிக்க சில பிரபல நடிகர்களிடம் பேசி வருகிறார்.



## நான் சின்ன ஸ்ரீதேவியா?

திறமை என்பதை விட அதிர்ஷ்டத்தை அதிகமாகவே நம்புகிறாராம் தமன்னா. இதுகுறித்து தமன்னா கூறுகையில்; சினிமாவில் நடிகையான போது இந்தியில் தான் பிரபலமாக ஆசைப்பட்டேன். ஆனால் தென் மாநில சினிமா என்னை இழுத்துக் கொண்டது. அதனால் தமிழ், தெலுங்கில் பிரபல நடிகையானேன். நானே நினைத்து பார்க்காததெல்லாம் நடந்ததற்கு காரணம் என்னுடைய அதிர்ஷ்டம்தான். சில ஆண்டுகளுக்குப் பின் இந்திக்கு சென்று நடித்தேன். நடித்த படம் வெற்றி பெறவில்லை என்ற போதும், அங்குள்ளவர்கள் என்னை சின்ன ஸ்ரீதேவி என்கின்றனர். அதைக்கேட்டு பூரித்துப் போகிறேன். நான் பெரிதாக ஒன்றும் நடித்து விடவில்லை. அப்படியிருந்தும், என்னை ஸ்ரீதேவியுடன் ஒப்பிடுவதும், என்னுடைய நல்ல நேரம் தானே என்கிறாராம்.



## தெலுங்கில் அஞ்சலி விஷ்வரூபம்

...வது ஒரு நடிகையை குறித்து, சர்ச்சையான செய்திகள் ... மார்க்கெட், அத்துடன் அதல பாதாளத்துக்கு போய் விடுவது ...லி விஷயத்தில் இது உல்டாவாக உள்ளது. சமீபத்தில், அவரைப் ...க்குரிய செய்திகள், அவரின் மார்க்கெட்டை எந்த வகையிலும் ... அவருக்கு கடும் கிராக்கியை ஏற்படுத்தி விட்டது. ...து மார்க்கெட், உச்சத்துக்கு போய்விட்டது. இத்தனைக்கும், ...தெலுங்குப் படத்தில் தான். ஆனாலும், அதற்குப் பின், தெலுங்கு ... கை கழுவி விட்டது. கோலிவுட் தான் அவருக்கு, சீரான ...ந்தது. இப்போது அஞ்சலியை, திரையில் பார்த்தாலே, ஒட்டு...ம், உற்சாகத்தின் உச்சத்துக்கே போய் விடுகின்றனர். இதனால், தன் ...மாக உயர்த்தி உள்ளார், அஞ்சலி. அதிகபட்சமாக தமிழில் சேட்டை ...பா வாங்கிய அஞ்சலி தற்போது தெலுங்குப் படங்களில் நடிக்க, ... விரலை நீட்டுகிறாராம்.



## அஜீத், சூர்யாவை குறிவைத்துள்ள அமலா பால்

அமலா பால் விஜய்யுடன் சேர்ந்து தலைவா படத்தில் நடித்துள்ளார். முன்னணி நடிகர்களான விக்ரம், விஜய்யுடன் நடித்தாகிவிட்டது. அடுத்ததாக அஜீத் மற்றும் சூர்யாவுடன் ஜோடி சேர விரும்புகிறாராம்.

அமலா தற்போது தெலுங்கில் பிசியாக இருக்கிறார். அங்கு முன்னணி நடிகையாக முயற்சி செய்து வருகிறார். இந்நிலையில் தமிழிலும் பெரிய இடத்தைப் பிடிக்க விரும்புகிறார்.

## அஞ்சலியுடன் ஜோடி சேர விரும்பும் மகேஷ்!

அங்காடித்தெரு படத்தில், அஞ்சலியுடன் நடித்த மகேஷ்க்கு மீண்டும் அஞ்சலியுடன் நடிக்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டுள்ளது.



இது விஷயமாக ஒரு முறை அவர் அஞ்சலியிடம் தெரிவித்த போது, ''சந்தர்ப்பம் கிடைத்தால் கன்னாடிப் பாக நடிப்பேன்...'' என்றிருக்கிறார். அதனால், அந்த சந்தர்ப்பத்தை தானே உருவாக்கி, மீண்டும் அஞ்சலியுடன் டூயட் பாடி விட வேண்டும் என்று, சில படாதிபதிகளிடம், ''அஞ்சலியிடம் கால்ஷீட் வாங்கித் தருகிறேன். எங்களை இணைத்து படமெடுங்கள்...'' என்று கேட்டுக் கொண்டு வருகிறார் மகேஷ்.

## பாடல்



படம்: குருவி
இசை: வித்யாசாகர்
பாடல்வரிகள் : யுகபாரதி
பாடியவர்கள்:- உதித் நாராயணன்
ஸ்ரேயாகோஷல்

பெண் தேன் தேன் தேன்
உன்னை தேடி அலைந்தேன்
உயிர் தீயை அலைந்தேன் சிவன்தேன்...

ஆண் தேன் தேன் தேன்
என்னை நானும் மறந்தேன்
உன்னை கான பயந்தேன் கரைந்தேன்...

பெண் என்னவோ சொல்ல துணிந்தேன்
ஏதேதோ செய்ய துணிந்தேன்
உன்னோட சேரதானே
நானும் மலர்ந்தேன்...
(தேன் தேன் தேன்)

பெண் அள்ள வரும் கையை ரசித்தேன்
ஆள வரும் கண்ணை ரசித்தேன்
அடங்காமல் தாவும் உந்தன்
அன்பை ரசித்தேன்...

ஆண் முட்ட வரும் பொய்யை ரசித்தேன்
மோத வரும் மெய்யை ரசித்தேன்
உறங்காமல் எங்கும் உந்தன்
உள்ளம் ரசித்தேன்...

பெண் நீ சொல்லும் சொல்லை ரசித்தேன்
இதழ் சொல்லாததையும் ரசித்தேன்

ஆண் நீ செய்யும் யாவும் ரசித்தேன்
நிதம் செயாததையும் ரசித்தேன்

பெண் உன்னாலே தானே நானும்
என்னை ரசித்தேன்...
(தேன் தேன் தேன்)

ஆண் சேலையில் நிலவை அறிந்தேன்
காலிலே சிறகை அறிந்தேன்
கனவிலே காதல் என்று
நேரில் அறிந்தேன்...

பெண் திருடனே உன்னை அறிந்தேன்
திருடினாய் என்னை அறிந்தேன்
இன்னும் நீ திருட தானே
ஆசை அறிந்தேன்...


ஆண் என் பக்கம் உன்னை அறிந்தேன்
பலசிக்கல் உன்னால் அறிந்தேன்

பெண் நான் தென்றல்
உன்னை அறிந்தேன்
அதில் கூசும் பெண்மை அறிந்தேன்

ஆண் நீ நடமாடும் திராட்சை
தோட்டம் எதிரில் அறிந்தேன்...

(தேன் தேன் தேன்)

# விவசாயியும் கழுதையும்



வியாபாரி கழுதை ஒன்றை விலைக்கு வாங்கினான். வயலுக்கு ஓட்டிச் சென்று தானிய மூட்டைகளை கழுதையின் மீது வைத்துக் கொண்டு வருவான்.

காட்டிற்கு அழைத்துச் சென்று காய்ந்த சுள்ளி விறகுகளை கட்டுக்கட்டாக கட்டி கழுதையின் முதுகில் ஏற்றி வருவான்.

வைக்கோலும், கொஞ்சம் தானியமும், கழனித் தண்ணீரும் கழுதைக்கு உணவாக வைப்பான்.

கழுதைக்கு எஜமான் மீது கோபம்.

''இவ்வளவு வேலை செய்யும் தனக்கு படுத்து உறங்க ஒரு இடம் கூட இல்லை. குட்டிச்சுவர் ஓரமாக நிற்கிறேன். உண்ண நல்ல உணவு இல்லை. மிச்சம் மீதிகளை உண்ணத் தருகிறார்கள்.

ஆனால், நேற்று வந்த நாய்க்குட்டிக்கு எவ்வளவு மரியாதை. எஜமான் கொஞ்சுகிறார். விதவிதமான உணவுகளைக் கொடுத்து கவனிக்கிறார்கள்.

அந்த நாய் எஜமான் வெளியே இருந்து வந்ததும் அவர் காலைச் சுற்றுகிறது. வாலை ஆட்டுகிறது. அவர் மேல் தாவுகிறது. நாக்கால் அவர் முகத்தை நக்குகிறது. முன்னங்கால்கள் இரண்டும் எஜமானின் தோளில் வைக்கிறது. அவனும் அதை பெருமையாக நினைக்கிறான். கொஞ்சுகிறான். நானும் அதைப்போல் கொஞ்சிக் குலவப் போகிறேன். எஜமானரின் அன்பைப் பெறுவேன்,'' என்று கழுதை வீர சபதம் செய்தது. அன்று எஜமானன் வீட்டுக்குள் நுழையும் போதே ஏதோ கோபத்துடன் வந்தான். சமய சந்தர்ப்பம் அறியாத கழுதை, எஜமான் பின்னாலேயே வீட்டுக்குள் நுழைந்தது. எஜமான் உட்கார்ந்தபோது அவன் எதிரே நின்று தன் முன்னங்கால்களை எஜமானன் மீது

தூக்கி வைத்தது. அவன் முகத்தை நோக்கி தன் சொர சொரப்பான நாக்கை நீட்டியது. வாலை வேறு ஆட்டியது.

இதை எதிர்பாராத எஜமானன் கழுதையை தள்ளிவிட்டான். எல்லா சாமான்களும் தாறுமாறாக உருண்டு ஓடின. விழுந்து உடைந்தன. எஜமானன் உடம்பில் காயங்கள் ஏற்பட்டன. உடனே எஜமானின் ஆட்கள் கழுதையை விரட்டினார்கள். ''கழுதைக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. இல்லையென்றால் அது நாயைப்போல் கடிக்க வருமா? அதைக் கொல்லுங்கள்'' என்று தடிகளுடன் ஓடி வந்தனர்.

கழுதையை அடித்து துவைத்தனர். அது வலி தாங்காமல் கனைத்தது.

''என் துன்பத்திற்கெல்லாம் காரணம் நானேதான்.

நான் நாய்போல நடக்க ஆசைப்படுவேனா? நாய் நாய் தான், கழுதை கழுதைதான். வேண்டாததற்கு ஆசைப்பட்டு, வேண்டும் மட்டும் வாங்கிக் கட்டிக் கொண்டேன். எனக்கு இது தேவைதான்'' என்று கழுதை வலி தாங்க முடியாமல் புலம்பிக்கொண்டது.

# இந்த வார குட்டீஸ்



பெயர்: நதிஷான்
பெற்றோர்: இருதயநாதன், மீனாட்சி.
இடம் :- தலவாக்கலை.



பெயர்: சிந்துஜன்
பெற்றோர்: ஜெயசங்கா, பரிமளாதேவி,
இடம் :-சந்திரிகாமம்.



# பனி மீன்கள்

பூமியின் வடக்கு மற்றும் தெற்கு துருவங்களில் கடல்களில் பனி சூழ்ந்திருக்கும். தண்ணீர் மைனஸ் 1.8 சென்டி கிரேட் குளிராக இருக்கும். இந்த வெப்பநிலை உயிரினங்கள் வாழ உகந்ததல்ல என்றாலும் சில மீன் இனங்கள் இந்த குளிரில் வசிக்கின்றன. அது எப்படி? என்ற ஆச்சரியம் உங்களைப்போலவே விஞ்ஞானிகளையும் சிந்திக்க வைக்க இதுபற்றி ஆய்வு செய்தனர்.

முடிவில் பனி மீன் இனங்களில் உடலில், குளிரைத்தடுக்கும் புரத அடுக்குகள் இருப்பதை அவுஸ்திரேலியாவின் சுவின்பர்ன் பல்கலைக்கழக விஞ் ஞானிகள் கண்டுபிடித்தனர். மைனஸ் 0.% வரை உள்ள குளிரையும் இந்த மீன்கள் தாங்கிக் கொள்ளும்.

அதற்கு கீழ் வெப்பநிலை சென்றால் மீன்கள் இறந்துவிடும் என அறிந்தனர்.

அந்த புரதத்தை பயன்படுத்திக்கொண்டு மனிதர்களும் துருவப்பகுதியில் கோலோச்ச முடியுமா? என்று ஆய்வுகள் நடந்து வருகிறது!



# ஆ...ஆபத்தான கடலா?

கடல் என்றாலே பார்க்க அழகு.

இரசிக்க அழகு. சில கடற்பிரதேசங்களில் இருந்தபடி கடலையே பார்த்துக் கொண்டிருப்பது தனிச் சுகம். ஆனாலும் சில கடல் பகுதிகள் எப்போதும் ஆபத்தையும் சேர்த்துக் கொண்டு நம்மை இரசிக்க வைப்பவை.

அந்த வகையில் அவுஸ்திரேலியாவில் உள்ள பிரேசர் தீவில் உள்ள கடல் இந்த பயங்கரத்தில் ஆக்ரோஷமாக மேலெழுந்தவாரியாக பயமுறுத்திக் கொண்டிருக்கும் இந்த கடலின் அலைகள் பார்த்ததுமே சுனாமி பயத்தை ஏற்படுத்தி விடும். இது போதாதென்று இந்த கடற்கரைப் பகுதியில் பார்வைக்கு ஓநாய்களைப் போல் தோற்றமளிக்கும் டிஸ்கோஸ் என்ற மிருகங்களும் அதிகம் நடமாடுகின்றன.

தனியாக மாட்டுகிற குழந்தைகளை இவை வேட்டையாடி விடும் என்பதால், இந்த கடற்கரையும் கடலோடு சேர்த்து பயத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறது.

# திரும்பிச் சென்ற துறவி!

மொகலாயப் பேரரசர் அக்பரிடம் யாசகம் கேட்க ஒரு துறவி அரண்மனைக்குச் சென்றார்.

அக்பர் அமர்ந்து இறைவனிடம் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தார்.

அதைக் கண்ட துறவி, திரும்பிச் செல்லப் புறப்பட்டார். எதுவும் பேசாமல் ஏன் திரும்பிப்போகிறீர்கள்? என்று கேட்டார் அக்பர். அதற்கு அந்த துறவி நான் காட்டில் குடிசை ஒன்றில் வசிக்கிறேன். என் குடிசைக்கு வரும் விருந்தினர்களை உபசரிக்க எனக்குக் கொஞ்சம் பொருள் தேவைப்பட்டது. தங்களிடம் அதைப் பெற்றுச் செல்லலாம் என்று வந்தேன்.

ஆனால் இங்கே நீங்களே இறைவனிடம் யாசிப்பதைப் பார்த்தேன். எனவே நான் நேரடியாக இறைவனிடமே கேட்டுக்கொள்ளலாம் என்றுதான் திரும்பிப் போகிறேன் என்றார்.

Colour: Cyan Magenta Black

★ **பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (சரி ) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.**

17) சிறுவர் கூட்டம் என்னைப் பார்த்துப் பாடுகிறது ( )

18) உங்கள் வருகையால் நான் பெரும் பேறு பெற்று விட்டேன். ( )

19) இரவு கண்கள் விழித்தமையால் கண் வீங்கியது ( )

★ **சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.**

20) 1) உமிழ் நீர் 2) உமிள்னீர்

3) உமிள்நீர் 4) உமிழ்னீர்

21) 1) நிச்சயம் 2) நிட்ச்சயம்

3) நிட்சயம் 4) நிற்ச்சயம்

22) 1)பிரையோசனம் 2) பிரயோசணம்

3) பிரையோசனம் 4) பிரயோசனம்

படத்தைப் பார்த்து அவற்றின் பெயரை ஆங்கிலத்தில் எழுதுக

23)  ____________

24)  ____________

25)  ____________

26)  ____________

★ **கீழே தரப்பட்ட வாக்கியங்களின் கருத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து எழுதுக.**

27) எங்கள் நாடு இலங்கை

____________________

28) உனது பிறந்த திகதி என்ன?

____________________

**பின்வரும் வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

29) Go there

____________________

30) What do you like for lunch?

____________________

31) தவல் வெலா நான்ன

____________________

32) பித்தரயக் ரு(ப்)பியல் விசி அ(ட)டய்

____________________

★ **பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

33) அம்மா எனக்கு கொஞ்சம் பசிக்கிறது

____________________

34) பெரிய தேங்காய் ஐந்து தாருங்கள்

____________________

★ **மிகச்சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1) இவ்வுருவில் குறிக்கப்படும் விளையாட்டை விளையாடுவதற்கு ஒரு அணியில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை




1)7 2) 5 3) 6 4) 11

2) இவ்வுருக்களில் உள்ள தாவரங்களின் பெயர்களைச் சரியாகக் குறிக்கும் விடை



1) ஆடாதோடை, மஞ்சள்
2) முடிதும்பை, ஆடாதோடை
3) பின்ன , இருவேரி
4) வெண்ஊமத்தை, முடிதும்பை




3) 

இவ்வுடுத்தொகுதியின் பெயர்



1) சிறுகரடி 2) ஓராயன்


3) பெருங்கரடி 4) மிதுனம்

4) பின்வரும் கருவிகளில் எது ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளுக்கு உதவாது

1)  2)  3)  4) 

5) வேட்டையாடும் பறவையின் கால் எது

1)  2)  3)  4) 

6) 

இவ்வீதிக் குறியீடு உணர்த்துவது

1) முன்னால் ஒடுங்குகிறது
2) புகையிரதவீதி
3) பெருந்தெரு
4) விமானஓடுபாதை

7) மின்காந்தம் பயன்படுத்தப்படும் பொருள் ஒன்று

1) திசைகாட்டி 2) மின்மணி

3) மின்னழுத்தி 4) காற்று வேகமானி

8) பிறப்புச் சான்றிதழ் பிரதி ஒன்றினைப் பெற்றுக் கொள்ளச் செல்ல வேண்டிய இடம்

1) கிராமசேவகர் 2) பிரதேசசெயலகம்

3) பொதுச் சுகாதாரப்பரிசோதகர் 4) பொலிஸ் நிலையம்

9) விலங்கு விசர் நோய்க்குத் தடுப்பு மருந்து கண்டு பிடித்தவர்

1) ஆதர் சி. கிளார்க் 2) எடிசன்

3) பாஸ்டர் 4) பபீஜ்

31) இரவில் மட்டும் உணவு தேடும் உயிரினங்களைக் கொண்டமைந்த விடைத் தொகுதி

1) மரநாய் , ஆந்தை, காட்டுச்செண்பகம் , நாகணவாய்

2) செம்பகம, பூங்குயில்,கருங்குரங்கு, தவளை, பச்சைப்பாம்பு

3) ஓநாய், நரி , சிறுத்தை, வெளவால் , கரப்பான் , நுளம்பு , பல்லி

4) ஆந்தை, நத்தை, எலி , மரநாய்,கரப்பான்,பாம்பு


**★ விடை தருக**

**யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா , அனுராதபுரம் , புத்தளம் ஊடாக கொழும்பிற்கான தூரம் கிலோமீற்றரில் கீழே காட்டப்பட்டுள்ளது. அதனை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக**

**கொழும்பு** 125
**புத்தளம்** 86
**அனுராதபுரம்** 78
**யாழ்ப்பாணம்** 127

1) வவுனியாவிலிருந்து கொழும்பு வரையான தூரம் யாது?


2) யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரையான தூரமா?
அனுராதபுரத்தில் இருந்து கொழும்பு வரையான தூரமா?
மிகக்கூடியது

3 )  இவ்வுருவில் உள்ள நாற்பக்கல்கள் எத்தனை?

4) செங்கோணத்தை விடக் குறைந்த கோணங்கள் எத்தனை?

5) கீழே உள்ள தளவடிவங்களைக் கொண்டு தயாரிக்கக் கூடிய திண்ம உருக்களின் எண்ணிக்கையை எழுதுக



6)  இவ்வுருவில் உள்ள முக்கோணிகள் எத்தனை?


7) இரவு 9.00 மணிக்கு ஆரம்பித்த கிரிக்கட் போட்டி 3 மணித்தியாலம் 45 நிமிடங்களில் முடிவடைந்தது. கிரிக்கட் போட்டி முடிந்த நேரத்தை முகிற்றல் நேரமாக எழுதுக.


8) 18 m நீளமுள்ள கயிறு ஒன்று ஐந்து துண்டுகளாக அறுந்து விட்டது. அத்துண்டுகளை முடிந்து நீளமான கயிறாக்கும் போது ஒரு முடிச்சுக்கு 50cm வீதம் கயிறு தேவைப்பட்டது. ஐந்து துண்டுகளும் முடிந்த பின் தற்போது கயிற்றின் மொத்த நீளம் யாது?

9) $\frac{1}{2}$ லீற்றர் தேங்காய் எண்ணெயின் விலை 62. 50 சதம் எனின் 1500மில்லிலீற்றர் தேங்காய் எண்ணெயின் விலை?


10) முகிற்றல் கடிகாரம் காட்டும் நேரத்தை சாதாரண கடிகாரத்தில் குறித்துக் காட்டுக?

00.30




11)  உருளையின் விளிம்புகள் எத்தனை?

12) உருளையின் மேற்பரப்புக்கள் எத்தனை?.

13) 

இவ்வுருவின் பரப்பளவு யாது?

14) சுற்றளவு யாது?

15) பன்னிரண்டிற்கு 25 நிமிடங்கள் என்பதை வேறு எப்படிக் கூறலாம் என்பதைச் சொற்களில் எழுதுக.

16) நான்கு இலக்கங்களால் ஆக்கக் கூடிய மிகப் பெரிய எண்ணை சொற்களில்எழுதுக.

17) நாற்பதாயிரத்திற்கு முன் உள்ள எண்ணை எண்குறியில் எழுதுக.

18) 213, 324, 435, 546, ______
வெற்றிடத்தில் வரும் எண்ணை எழுதுக.

19) **நான் வானத்திலிருந்து பூமியை நோக்கி நண்பர்களுடன் வந்து சேர்ந்தேன். என்னைத் தாவரமொன்று வேரின் மூலம் உறிஞ்சிக் கொண்டது. அதன்பின் நான் ..........** என்ற வாக்கியத்தைத் தொடர்ந்து ஆறு வாக்கியங்கள் எழுதுக.

1.
2.
3.
4.
5.
6

**9) சச்சின் அதிக ஓட்டங்கள் எடுத்து சாதனை படைத்தமைக்குரிய காரணம்.**

1) அவர் அதிக டெஸ்ட் போட்டிகளில் விளையாடியமை.

2) கடுமையான பயிற்சிகளின் பின் விளையாடியமை.

3) ஏனையவர்களை விட கூடிய ஓட்டங்கள் எடுத்தமை.

**10) பயனற்ற ஒரு செயலைக் குறிக்கும் உவமைத் தொடர்.**

1) மடை திறந்த வெள்ளம் போல

2) விழலுக்கிறைத்த நீர் போல

3) ஆப்பிழுத்த குரங்கு போல

**11)** 5 ரொபி +2கன்டோஸ் = ரூ 95.00
5 ரொபி - 3கன்டோஸ் = ரூ 45.00
**எனில் ரொபி ஒன்றும் கன்டோஸ் ஒன்றும் என்ன விலை?**

1) ரூபா 25.00

2) ரூபா 30.00

3) ரூபா 40.00


**12) பத்திரிகையொன்றின் விலை 20.00 ஆகும். மிதுலன் 2013ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பத்திரிகைக்கு செலவு செய்த பணம் எவ்வளவு?**

1) 1840.00

2) 1800.00

3) 1820.00

**13) இவ்வுருவில் உள்ள முக்கோணங்கள் எத்தனை?**




1) 6

2) 18

3) 21

**14) இவ்வுருவில் உள்ள சதுரங்கள் எத்தனை?**



1) 30

2) 25

3) 40

**15) இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டு எத்தனையாம் நூற்றாண்டு எத்தனையாம் தசாப்தம்.**

1) 20ம் நூற்றாண்டு 7ம் தசாப்தம்

2) 19ம் நூற்றாண்டு 4ம் தசாப்தம்

3) 20ம் நூற்றாண்டு 5ம் தசாப்தம்

**16) பின்வரும் ஆண்டுகளில் 21ம் நூற்றாண்டு 4ம் தசாப்தத்திற்குரிய ஆண்டு எது?**

1) 2035

2) 2013

3) 1940


**17) இவ்வருடம் தை 1ம் திகதி புதன்கிழமை எனின் இந்த வருடத்தில் எத்தனை செவ்வாய்க்கிழமை உண்டு.**

1) 52

2) 53

3) 54

**18) இவ்வுருவை ஆக்க 14 தீக்குச்சிகள் தேவை எனின் மேலும் 20 தீக்குச்சிகள் கொண்டு இன்னும் எத்தனை முக்கோணிகள் அமைக்கலாம்.**



1) 3

2) 5

3) 8

**19) பின்வருவனவற்றுள் எது ஒரு அபிப்பிராயமாகும்.**

1) கோள்களிற்கு சுய ஒளி உண்டு.

2) மீன்கள் நீரில் மட்டும் வாழும்.

3) சிவப்பு நிறம் மிக அழகானது.


★ **20ம், 21ம் வினாக்கள் பின்வரும் தகவலை அடிப்படையாகக் கொண்டவை.**

★ தனு, கீர்த்து, யகி, வீணா, தக்ஷி, கரிணி ஆகியோர் ஒரு வாங்கில் அமர்ந்திருக்கின்றனர்.

★ கீர்த்துவிற்கும் வீணாவிற்கும் இடையில் யகி அமர்ந்திருக்கிறாள்.




★ தக்ஷிக்கு வலதுபக்கத்தில் கரிணி அமர்ந்திருக்க தனுவிற்கு வலப்பக்கத்தில் கீர்த்து அமர்ந்திருக்கிறாள்.

★ யகிக்கும் தக்ஷிக்கும் இடையில் வீணா அமர்ந்திருக்கிறாள்.

30) 

1. 
2. 
3. 
4. 

31) நான்கு உருக்களுள் ஒன்று வேறுபட்டது அவ்வுருவினைத் தெரிவு செய்க

1. 
2. 
3. 

**★ 32- 33 வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ளவற்றை குறித்த ஒரு வரிசைக்கிரமத்தில் ஒழுங்குபடுத்தலாம் அவ்வாறு ஒழுங்குபடுத்தும் போது நடுவில் வருவதைப் புள்ளிக் கோட்டில் எழுதுக**

32) 1) 256 2) 243 3) 189

4) 345 5) 217 6) ...............

33) 1) எறும்பு 2) எலி 3) தவளை

4) முயல் 5) ஆடு 6) ...............

**★ 34,35 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள சோடிச் சொற்கள் ஏதோ ஒரு அடிப்படையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை தொடர்பற்ற சொல்லின் கீழ்க் கோடிடுக.**




34) 1. ஆசிரியர் –மாணவர் 2. வைத்தியர்– நோயாளி

3. அதிபர் –வைத்தியசாலை 4. பொலீஸ்– திருடன்


35) 1. பூனை–குட்டி 2. குயில் –குஞ்சு

3. நாய்–கன்று 4. தென்னை–நாற்று

36) கீழ் வரும் உருக்களில் $\frac{25}{75}$ எனும் பின்னம் நிழற்றப்பட்டுள்ள உரு




1. 
2. 
3. 
4. 

37) ? வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க




1. 80 2. 65 3. 20

38) வேறுபாடான உருவின் கீழ்க் கோடிடுக

1. 
2. 
3. 
4. 


**★ 39,40ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள விபரங்களினால் குறிப்பிடப்படும் சொல்லை எழுதுக.**

39) முதலெழுத்து வடத்தில் இல்லை விடத்திலுண்டு
இரண்டாமெழுத்து காலையிலுண்டு கலையிலில்லை
மூன்றாமெழுத்து பாதையிலில்லை பாரையிலுண்டு

______________________________

40) முதலெழுத்து சித்துவிலில்லை சித்தியிலுண்டு
இரண்டாமெழுத்து கர்மத்திலில்லை கருமத்திலுண்டு
மூன்றாமெழுத்து மந்தையிலுண்டு தந்தையிலில்லை
நான்காமெழுத்து பானத்திலில்லை பாணத்திலுண்டு
ஐந்தாமெழுத்து காம்பிலுண்டு தோப்பிலில்லை

______________________________



# தவறு யாருடையது!

கோலாகலமாக தொடங்கிய பதுளை முதியங்கன ரஜமஹா விகாரை வருடாந்த பெரஹரா நிகழ்வு துர்ப்பாக்கியமான ஒரு சம்பவத்தால் தற்போது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு பெரஹரா கோலாகலமாக ஆரம்பமாகியது. சனக்கூட்டமும் அலைமோதிக் கொண்டிருந்தது. இவ்வேளையில் பெரஹராவில் சென்று கொண்டிருந்த யானையொன்று குழம்பி ஓடத் தொடங்கியதால் கூட்டம் அல்லோலகல்லோலப்பட்டது. யானையால் யாருக்கும் எந்த ஆபத்தும் நேரவில்லை என்றாலும் சிதறி ஓடிய கூட்ட நெரிசலில் ஒரு பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட 24 பேர் காயங்களுக்குள்ளாகினர். காயமடைந்தவர்கள் உடனடியாக பதுளை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.



பெரஹராவின் போது குழப்பம் அடைந்த யானை மயக்க ஊசி மருந்தேற்றி கட்டுப்படுத்தப்பட்டது. இந்த யானை பெரஹராவின் போது தவறுதலாக சிதற விடப்பட்ட தீயை மிதித்ததன் காரணமாக குழப்பமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. பதுளைப் பொலிஸார் எடுத்துக்கொண்ட துரித நடவடிக்கையின் பயனாக பேராபத்துக்கள் ஏதுவும் ஏற்படாது தடுக்கப்பட்டது. இல்லையேல்....?

திருவிழாக்கள், பெரஹராக்கள், சமய, கலாசார நிகழ்வுகளில் யானைகள் வலம் வரச் செய்யப்படுகின்றன. இந்த யானைகள் எப்போது வேண்டுமானாலும் குழப்பமடையலாம்? அதனால் பதுளையில் போன்று அசம்பாவிதங்கள் நிகழலாம். உயிர்ப்பலிகளும் ஏற்படலாம்.

இதைத் தடுக்க என்ன வழி?

யானைகள் பற்றி புகைப்படம் எடுக்கும் எப்போதும் யானைகளை பற்றிய ஆய்வுகளை தொடர்ந்து மேற்கொள்ளும் இந்தியாவின் மாத்ருபூமி என்ற பத்திரிகையின் புகைப்படப்பிடிப்பாளர் சந்திரகுமார் தெரிவிக்கும் கருத்துகள் சிந்தனைக் குரியவை!

யானைகளின் பாதங்கள் காட்டுப்பகுதியில் நடமாடுவதற்கு ஏற்றவை. நாட்கணக்கில் காட்டில் அலைந்து திரிந்தாலும் யானைகளுக்கு சோர்வு ஏற்படுவதில்லை. ஆனால் நகர்ப்பகுதியின் வீதிகள் தாரினால் அமைக்கப்பட்டு வெப்பத்தால் கொதிக்கின்றன. இந்தச் சூட்டை யானைகளால் தாங்கிக் கொள்ள இயலாது. யானைகள் குழப்பமடைவதும் கோபத்தில் மனிதர்களைத் தாக்குவதும் இதனால்தான்.

அதேபோல பிரமாண்டமான காடுகளுக்குள் சுற்றித்திரியும் யானைகளை திருவிழாக்களில் நெருக்கியடித்து நிற்கவைக்கிறார்கள். அதன் உடல் முழுவதும் மூடப்பட்டிருக்கும் அலங்காரத் துணிகளால் யானைகள் எரிச்சலடைகின்றன.

கூட்ட நெரிசலும் வெடிகளின் சத்தமும் யானைகளுக்குப் பிடிப்பதில்லை. மதம் பிடிப்பதற்கும் மனிதர்களைக் கொல்வதற்கும் இதுவும் ஒரு காரணம். மனிதர்கள் தன் அறிவின் வன்முறையாலும் மதத்தின் பெயராலும் பாரம்பரியச் சடங்குகளின் பெயராலும் யானைகளைக் காலம் காலமாக துன்புறுத்திக் கொண்டே இருக்கிறார்கள். அவை எப்போதேனும் திருப்பித்தாக்கினால் யானைக்கு மதம் பிடித்து விட்டது என்று சொல்கிறார்கள். ஆனால் உண்மையில் மதம் பிடித்திருப்பது யாருக்கு என்று கேள்வி எழுப்புகிறார் சந்திரகுமார்.

உண்மையில் சிந்திக்க வேண்டிய கேள்வி!

-அபி-

# 60 ஆண்டு காலம் தமிழ்ச் சினிமாவை ஆண்ட குரல்

# டி.எம்.எஸ்.



டி.எம்.எஸ்...!

தமிழ் மக்களைத் தனது காந்தர்வக் குரலால் கட்டிப்போட்ட எழிலிசை வேந்தன்: தமிழ் மொழியை அதற்கே உரிய அழகோடு தெள்ளத் தெளிவாக உச்சரித்துப் பாடிய பாட்டுத் தலைவன்!

50 ஆண்டுகளாய்த் தமிழ் சினிமாவை ஆண்ட குரல் அடங்கிவிட்டது. காற்றில் ஒரு வெற்றிடம் விழுந்து விட்டது. டி.எம்.எஸ்.ஸின் மரணத்தை நம்ப மனம் மறுக்கிறது. உடல்நல குறைவு காரணமாக கடந்த 26 ஆம் திகதி இறைபதம் அடைந்துவிட்டார்.

டி.எம்.சௌந்தரராஜன் பற்றி சுவையான சிறு குறிப்புகள் உங்களுக்காக.

★ டி.எம்.எஸ். என்பதில் உள்ள 'எஸ்' என்றால் சௌந்தரராஜன்: 'எம்' என்பது அவரின் தந்தை மீனாட்சி அய்யங்கார்: 'டி' என்பது அவரின் குடும்பப் பெயர். ஆனால் இதற்கு டி.எம்.எஸ்ஸே சொல்லும் வேறு சில விளக்கங்கள் சுவையானவை. தியாகராஜ பாகவதர் (டி), மதுரை சோமு (எம்),கே.பி.சுந்தராம்பாள் (எஸ்) ஆகிய மூவரையும் தன் மானசீக குருமார்களாக வைத்திருப்பதையே இது குறிக்கிறது என்பார்.

மதுரை வரதராஜப் பெருமாள் கோயிலில் பூசாரியாகப் பணியாற்றியவர் டி.எம்.எஸ்ஸின் தந்தை மீனாட்சி அய்யங்கார். டி.எம்.எஸ்ஸின் முதல் பாடல் 'ராதே என்னை விட்டு ஓடாதேடி' ஒலிப்பதிவான இடம் கோவை சென்ட்ரல் ஸ்டுடியோ. 60 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு தொலைக்காட்சித் தொடருக்காக மீண்டும் அங்கே போய், இடிபாடாகக் கிடந்த அதே பழைய ஒலிப்பதிவு அறையில் நின்று மீண்டும் அதே பாடலைப் பாடி மகிழ்ந்திருக்கிறார்!

★ டி.எம்.எஸ்ஸின் முருக பக்தி அனைவருக்கும் தெரியும். கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும்....'உள்ளம் உருகுதய்யா முருகா', 'சொல்லாத நாளில்லை சுடர்மிகு வடிவேலா', 'மண்ணானாலும் திருச்செந்தூரில் மண்ணாவேன்' போன்ற உள்ளம் உருக்கும் பலபல முருகன் பாடல்களுக்கு இசையமைத்துப் பாடியவர்!

★ 'அடிமைப் பெண்' படத்தின் போதுதான் டி.எம்.எஸ்ஸின் மகளுக்குத் திருமணம். 'பாடி முடித்துவிட்டுத்தான் போக வேண்டும்' என்று எம்.ஜி.ஆர். உத்தரவிட்டும் கோபத்தில் கிளம்பிச் சென்று விட்டார் டி.எம்.எஸ்.

அந்தப் பாடல் வாய்ப்பு அப்போதுதான் திரையுலகில் இளம் பின்னணிப் பாடகராக நுழைந்திருந்த எஸ்.பி.பாலசுப்பிரமணியத்துக்குக் கிடைத்தது. அந்தப் பாடல்தான். 'ஆயிரம் நிலவே வா!'

★ பொது நிகழ்ச்சிகளுக்குத் தங்க நகைகள் அணிந்து செல்வதில் விருப்பம் உள்ளவர். இல்லாட்ட ஒருத்தனும் மதிக்க மாட்டான்யா! 'பாவம் டி.எம்.எஸ்ஸுக்கு என்ன கஷ்டமோ!ன்னு உச்சுக் கொட்டுவான். அதனால இந்த வெளிவேஷம் தேவையா இருக்கு' என்பார்!

★ கவிஞர் வாலியைத் திரை உலகுக்கு அழைத்து வந்தது டி.எம்.எஸ். அந்த நன்றியை இன்று வரையிலும் மறவாமல். 'இப்போ நான் சாப்பிடுற சாப்பாடு டி.எம்.எஸ் போட்டது' என்று சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் நெகிழ்வார் வாலி!

★ 'நீராரும் கடலுடுத்த...' என்னும் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலையும் 'ஜன கண மன' என்னும் தேசிய கீதத்தையும் யாரும் பாட முன் வராத நிலையில் டி.எம்.எஸ்ஸும், பி.சுசிலாவும் இணைந்து பாடியது அந்நாளில் பரபரப்புச் செய்தியாக இருந்தது!

★ தனலட்சுமி என்ற பெண்ணைக் காதலித்தார். அவர்கள் சற்று வசதியான குடும்பம் என்பதால், டி.எம்.எஸ்ஸுக்குப் பெண் தர மறுத்து விட்டார்கள். காதல் தோல்வி பாடலைப் பாட நேரும் போதெல்லாம் அந்த தனலட்சுமியின் முகம் தன் மனக் கண்ணில் தோன்றுவதாகச் சொல்வார் டி.எம்.எஸ்!

★ காஞ்சிப் பெரியவர். புட்டபர்த்தி சாய்பாபா இருவரிடமும் மிகுந்த பக்திகொண்டவர் டி.எம்.எஸ். இவரது வீட்டுக்கு சாய்பாபா ஒரு முறை வருகை தந்திருக்கிறார். காஞ்சிப் பெரியவர் டி.எம்.எஸ்ஸை 'கற்பகவல்லி' பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்து, தான் போர்த்தியிருந்த சிவப்புச் சால்வையைப் பரிசாக அளித்ததைத் தனது பாக்கியமாகச் சொல்லி மகிழ்வார்!


★ கடவுள் பக்தி அதிகம் உள்ளவர் டி.எம்.எஸ். கண்ணதாசன் எழுதிய 'கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும்: அவன் காதலித்து வேதனையில் சாக வேண்டும்' என்ற வரிகளைப் பாட மறுத்துவிட்டார். பின்னர் கவிஞர் சாகவேண்டும் என்பதை வாட வேண்டும் என்று மாற்றித் தந்த பிறகே பாடினார்!

★ நீளமான குடுமியும் வடகலை நாமமும் டி.எம்.எஸ்ஸின் ஆதி நாளைய அடையாளங்கள். சினிமாவில் வாய்ப்புத் தேடும் பொருட்டு கோயம்புத்தூர் வருவதற்கு முன்பாக இதே கோலத்தில் தன்னை ஒரு புகைப்படம் எடுத்துக்கொண்டு விட்டு. பின்பு குடுமியை எடுத்துவிட்டுக் கிராப் வைத்துக் கொண்டார். நாமம் அகன்று பட்டையாக விபூதி பூசியதும் அப்போது தான்!

★ எம்.ஜி.ஆர்., சிவாஜி, கருணாநிதி, ஜெயலலிதா என அனைவரிடமும் நெருங்கிப் பழகியிருந்தாலும், கடைசி வரையில் தனக்காக எந்த ஒரு விஷயத்துக்கும், யாரிடமும் சிபாரிசுக்காக அணுகாதவர்!

★ பட்டினத்தார், அருணகிரிநாதர் என இரண்டு படங்களில் கதாநாயகனாக நடித்திருக்கிறார்!







தமிழில் மட்டும் 10,000-க்கும் மேற்பட்ட சினிமா பாடல்களைப் பாடியுள்ளார். தவிர, தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிப் படங்களிலும் சில பாடல்களைப் பாடியுள்ளார். (அவரே இசையமைத்துப் பாடிய பக்திப் பாடல்கள் மேலும் சில ஆயிரங்கள் இருக்கும்.)


# மரணம் தீர்வல்ல

**மரணத்தின் விளிம்பை மனதால் காணும் அந்தக் கணப்பொழுதுகளில் வேண்டாம் இந்த விஷப்பரீட்சை என்று சொல்லி எப்படியாவது உயிர் தப்ப வேண்டும் என்று தவிப்பராம். பெரியவர்கள் எப்படியாவது சிறிது நேரத்துக்குத் தாக்குப் பிடிப்பார்கள். பிஞ்சு உயிர்கள் எவ்வாறு தாங்கிக் கொள்ளும்? அநியாயமாக உயிரைப் பறிகொடுத்து விடுவார்கள்.**

மனிதன் தன் வாழ்க்கையில் அனுபவிக்கும் 16 செல்வங்களில் கிடைத்தற்கரியது மழலைச் செல்வம். அது எல்லோருக்கும் இலகுவில் கிடைத்துவிடாது. ஒரு குழந்தைக்காக எத்தனையோ விரதமிருந்து கோயில், குளங்கள் வைத்தியசாலைகள் என ஏறி இறங்கி ஏங்குபவர்கள் எத்தனை பேர்.

அப்படி பல்வேறு முயற்சிகள் எடுத்தும் குழந்தைப் பாக்கியம் கிடைக்காமல் பலர் ஏங்கும் நிலையில் 10 மாதம் சுமந்து பெற்ற குழந்தையை கிணற்றிலும் ஆற்றிலும் தள்ளிவிடும் பெற்றோரை என்னவென்று சொல்வது.

அண்மைக் காலமாக குடும்பத்தோடு தற்கொலை முயற்சிகளில் ஈடுபடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. நாளுக்கு நாள் அது தொடர்பான சம்பவங்கள் ஊடகங்களில் வெளியாகிக் கொண்டுதான் உள்ளன. கடந்த 17ஆம் திகதியில் இருந்து இன்று வரையான 13 நாட்கள் அதாவது அரை மாத கால இடைவெளியில் மாத்திரம் பெற்றோரின் அசட்டுத்தனமான முடிவால் 7 குழந்தைகள் அநியாயமாக தமது உயிரைப் பலி கொடுத்துள்ளார்கள்.




அந்த வரிசையில் முதலாவது சம்பவம் கடந்த 17 ஆம் திகதி வவுனியா தாண்டிக்குளத்தில் இடம்பெற்றது. தாயொருவர் தனது மூன்று பெண் குழந்தைகளை கிணற்றில் தள்ளி வீழ்த்திவிட்டு தானும் குதித்துத் தற்கொலை செய்ய முயன்றார். இருந்தும் பிரதேச வாசிகளால் (துர்) அதிர்ஷ்டவசமாக அவர் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் லதுர்சிகா (6வயது), சன்சிகா (2 1/2வயது), மற்றும் நிதர்சிகா (1 1/2வயது) ஆகிய பெண் குழந்தைகள் இச்சம்பவத்தில் அநியாயமாக கொல்லப்பட்டார்கள். தாயின் மனநிலை சரியின்மை மற்றும் குடும்பத்தின் வறுமை நிலைமை என்பனவே இக்கொலைக்கான காரணம் என பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்தன.

இச்சம்பவத்தின் அதிர்ச்சியும் கவலையும் மக்கள் மனதில் இருந்து அகல்வதற்கு முன்னர் அதாவது ஒருவாரத்துக்குள் அது போன்று மற்றுமொரு சம்பவம் கடந்த 23 ஆம் திகதி ஹொரணையில் இடம்பெற்றது. தாயொருவர் பிறந்து நான்கு நாட்களேயான குழந்தையுடன் கிணற்றில் குதித்து தற்கொலைக்கு முயற்சித்தார். இம்மண்ணில் மலர்ந்து நான்கு நாட்களேயான அந்த மொட்டு பூமியின் மணத்தை நுகர்வதற்குள் கசக்கி எறியப்படுகிறது.

அதே தினத்தில் மற்றுமொரு சம்பவம் திஸ்ஸமகாராம யுதகண்டிய பிரதேசத்தில் இடம்பெற்றது. குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக 55 வயதுடைய தந்தையும் 5 வயது மகனுடன் கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டார்.

இவ்வாறு அடுத்தடுத்து நடைபெற்ற மூன்று சம்பவங்களைத் தொடர்ந்து நான்காவது சம்பவத்துக்கு மிக நீண்ட நாட்கள் எடுக்கவில்லை. மூன்றாவது சம்பவம் இடம் பெற்ற நாளில் இருந்து சரியாக 6ஆவது நாள் அடுத்த சம்பவமும் இடம் பெறுகிறது. அச்சம்பவம் 27 ஆம் திகதி வாழைச்சேனை மீராவோடையில் பதிவாகின்றது. தாயொருவர் தனது இரு பெண் குழந்தைகளுடனும் ஆற்றில் குதித்து தற்கொலை செய்ய முயற்சித்துள்ளார். இச்சம்பவத்தில் இரு குழந்தைகளும் பலியாக தாய் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி...26ஆம் பக்கம்

பஹமுன அஸாம்





# அரசியல்வாதிகள் போடும் தாளத்திற்கு ஆடும் மலையக கல்வியியலாளர்கள்!!

உலகில் வீழ்ந்து கிடந்த ஒவ்வொரு சமூகமும் எழுச்சி கொண்டது கல்வி வளர்ச்சியினாலேயே. கல்வியினாலேயே சமூகத்தில் நிலையான மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அதாவது கல்வியை தவிர்த்து ஏனைய அனைத்து துறைகளிலும் வளர்ச்சி கண்டாலும் அது நிலையான அபிவிருத்தியாகவும் இருக்க முடியாது. ஆதலால் சமூக வளர்ச்சியில் கல்வித்துறையின் பங்கு அளப்பரியது.

அந்தவகையில் வீழ்ந்து கிடக்கின்ற மலையகத்தை ஒரு எழுச்சி மிகு சமூகமாக மாற்றும் சக்தி கல்விக்கே காணப்படுகின்றது. இன்றுவரை மலையக சமூகம் உரிய இலக்கை அடையாமைக்கான பிரதான காரணம் கல்வியில் பின்னடைவினாலேயே ஆகும். தற்போது மலையக கல்வித்துறையில் ஏற்பட்டிருக்கின்ற சிறிய வளர்ச்சியும் கூட காலத்திற்கு ஏற்றவாறான மாற்றமே தவிர உரிய வளர்ச்சி இல்லை.

கடந்த காலங்களை விட தற்போது மலையக கல்வித்துறையின் மேம்பாட்டுக்காக ஏனைய சமூகங்களுக்கு நிகரான வசதிவாய்ப்புகள் அரசினால் வழங்கப்பட்டு வருகின்றன. பௌதீக மற்றும் மனித வளங்களில் அரசு பாரிய முதலீடுகளை செய்துள்ளது. ஆனால் அந்த முதலீட்டுக்கு ஏற்றவாறான முன்னேற்றம் ஏற்பட்டமைக்கான காரணத்தினை நாம் அலசி ஆராய்ந்தோமானால் மலையக கல்வித் துறையின் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கின்ற பல விடயங்களை இனம் காணமுடியும்.

அதில் பிரதானமான ஒன்றுதான் அரசியல் ரீதியான செயற்பாடுகள். இலங்கையில் வேறு எந்த சமூகத்திலும் இல்லாதவாறு அரசியல் தலையீடு அதிகமாக காணப்படுவது மலையக கல்வித் துறையிலேயோகும். கல்வி சமூகத்தை அரசியலில் ஈடுபடுத்திக் கொள்வதற்கும், தமது சுயலாப தேவைகளுக்காக அரசியலை பயன்படுத்திக் கொள்பவர்களினதும் தொகை மலையக அரசியல் கல்வித்துறையிலேயே அதிகம்.

இதில் முக்கிய விடயம் என்னவெனில் மலையக கல்வித்துறை சார்ந்தவர்களில் குறிப்பிட்ட தொகையினரின் நடவடிக்கையினால் தமது அந்தஸ்தை இழந்தே நிற்கின்றனர்.

காரணம் கல்வித் தகைமைக்கு அப்பால் குறுக்கு வழியில் அரசியல் செல்வாக்கின் ஊடாக பதவிக்கு வந்தவர்கள் அரசியல் கட்சிகளுக்கு காட்டும் விசுவாசமும், தகைமைக்கு அப்பால் பதவி மோகத்திற்காக விசுவாசம் காட்டும் ஒரு சிலரும் மறுபக்கம் தாம் வகித்த பதவியின் மூலம் செய்த ஊழல் செயற்பாடுகளை மறைப்பதற்கு சிலரும் என மலையக கல்வித்துறை சார்ந்த ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் என முக்கிய பதவியில் இருப்பவர்களில் பெரும்பாலானோர் முழுநேர அரசியல்வாதியாகியுள்ளனர். இதனால் பொறுப்பான பதவியில் இருக்கும் கல்வித்துறை சார்ந்தவர்களுக்கு அரசியல்வாதிகள் உரிய கௌரவம் கொடுப்பது இல்லை.

மலையகத்தில் கல்வித்துறையை பொறுத்தவரை அரசியல்வாதிகளின் தாளத்திற்கு ஆட்டம் போடுகின்றவர்களின் தொகையே அதிகமாக காணப்படுகின்றது. அதாவது அரசியல்வாதிகளை பகைத்துக் கொள்ளாமல் செயற்படுவதற்கும், உதவிகளை பெற்றுக் கொள்வதற்கும் ஒரு சிலர் தயாராகவே இருக்கின்றனர். அதற்காக எவர் எங்கு கூட்டத்திற்கு அழைத்தாலும், அரசியல் கட்சி தொண்டர்களைப் போல் ஆஜராகிவிடுகின்றனர். மறுபக்கம் அரசியல்வாதிகள் பேசுகின்ற பேச்சுக்கெல்லாம் தலையாட்டிக் கொண்டு எது சரி, எது பிழை என்று சிந்திக்காமல் கூட ஆமாம் போடுகின்றவர்களாகவே பெரும்பாலானோர் காணப்படுகின்றனர். அதாவது குறிப்பிட்டு கூறப் போனால் தோட்டத் தொழிலாளர்களைப் போலவே மலையக கல்வித்துறையை சார்ந்தவர்களும் காணப்படுகின்றனர்.

நாம் கௌரவமாக மதிக்கின்ற அதிபர், ஆசிரியர்களை ஒரு சில அரசியல்வாதிகள் நாலுபேருக்கு மத்தியில் மரியாதைக் குறைவாக பேசுவதையும் கட்சித் தொண்டர்களைப் போல் நடத்துவதையும் கண்முன்னால் காண்கின்றோம். நினைத்த நேரங்களில் எல்லாம் கூட்டங்களுக்கு அழைப்பதும். கூட்டங்களை ஏற்பாடு செய்யச் சொல்வதும் என அதிபர், ஆசிரியர்களுக்கு கட்டளையிடுவதும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அத்தோடு மலையகத்தில் பெரும்பாலான பாடசாலைகள் நாம் எந்த கட்சிக்கு சார்பான பாடசாலை என குறிப்பிட்டு கூறும் அளவுக்கு அரசியல் செயற்பாடுகள் பாடசாலைகளில் காணப்படுகின்றன. இந்த அதிபர், இந்த ஆசிரியர் எந்த கட்சி, எந்த தொழிற்சங்கம் என ஆரம்பப் பிரிவு மாணவர் கூட இனம் காணும் அளவு கட்சி வேலைகளில் ஈடுபடுகின்றனர். இதனால் மலையகத்தில் சமூக உணர்வுடன் தகைமையின் மூலம் முன்னேற முடிகின்ற அதிபர், ஆசிரியர்கள் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இதில் அரசியல்வாதிகள் மீது குற்றம் சுமத்துவதில் எந்தப் பயனும் இல்லை. காரணம் அரசியலுக்காக அவர்கள் எதையும் செய்ய தயாராகவே இருப்பவர்கள். அப்படியிருக்கையில் தலையை அவர்களிடம் நீட்டினால் சும்மா விடுவார்களா?

மலையகத்தைப் பொறுத்தவரை அதிபர், ஆசிரியர்களுக்கு ஏனைய சமூகத்தைச் சார்ந்த அதிபர், ஆசிரியர்களைவிட பாரிய பொறுப்பு இருக்கின்றது. மலையக மக்களை சிந்திக்கக் கூடியவர்களாக, தட்டிக் கேட்கக் கூடியவர்களாக சமூக உணர்வை ஊட்டி சரியான வழியில் அழைத்துச் செல்ல வேண்டிய தலையாய கடமை கல்வி சமூகத்தினையே சாரும். ஆனால் கல்விச் சமூகமே தமது இருப்பையும் அந்தஸ்தையும் இழந்து சுயலாப செயற்பாட்டில் ஈடுபடுமானால் மலையக சமூகத்தினை ஆண்டவனால் கூட காப்பாற்ற முடியாது.

ஒவ்வொருவருக்கும் அரசியல் தேவை. அது தனிமனித சுதந்திரம். அதற்காக தமது பதவியை ஈடுவைக்கக் கூடாது. மறுபக்கம் கல்வித் தகைமையின் ஊடாகவே உயர் பதவிகளுக்கு செல்ல வேண்டுமே தவிர குறுக்கு வழியில் அல்ல. அவ்வாறு பெற்றாலும் பதவிக்கு உரிய கௌரவம் கிடைக்குமா என்பது சந்தேகமே.

மலையக கல்வி சமூகம் முன்மாதிரியாக செயற்பட வேண்டும். உங்கள் தகைமைக்கு ஏற்பவே பதவி கிடைக்கிறது. ஆகவே நீங்கள் யாருக்கும் அஞ்சத் தேவையில்லை. அரசின் கல்விக் கொள்கையை முன்னெடுத்துச் செல்லும் சமூகத்திற்கு வழிகாட்டியாவது உங்களின் பொறுப்பு. அதற்கு எது தடையாக வந்தாலும் அதை தகர்த்தெறிய வேண்டியது உங்களது கடமை.

சமூகத்திற்கு வழிகாட்ட வேண்டிய நீங்களே வழிதவறி, அரசியல்வாதிகளுக்கு அடிவருடிகளாக செயற்படுவீர்களானால் எதிர்கால மலையகத்தின் நிலைமை என்ன? மாணவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டிய நீங்களே வாய்மூட்டி மௌனிகளாகவும், அரசியல், தொழிற்சங்க தலைமைகள் முதற்கொண்டு தொண்டர்கள் வரை பயப்படுவது ஏன்?

ஆகவே ஆசிரியர் பதவியை விட அந்தஸ்தான பதவி இந்த சமூகத்தில் வேறேதும் இல்லை. அவ்வாறான பதவியின் கௌரவத்தை பாதுகாக்க வேண்டியது தலையாய பொறுப்பு. உங்களது கௌரவமும், அந்தஸ்தும் பாதுகாக்கப்படும் வரைதான் மலையக சமூகம் சுயகௌரவமுடைய சமூகமாக ஏற்றம் கொள்ள முடியும். அரசியல் செயற்பாடுகளுக்கு அப்பால் மலையக சமூகத்தின் எதிர்கால நலன் கருதி ஒன்றிணைந்து சுயகௌரவத்துடன் செயற்பட வேண்டிய தருணம் இதுவேயாகும்.

**எஸ்.சந்திரமோகன்**

25ஆம் பக்கத் தொடர்ச்சி




பூஜா(7வயது) மற்றும் மேனுஜா(3 வயது) ஆகிய பெண் குழந்தைகளே சம்பவத்தில் கொல்லப்பட்டனர். குடும்பத்தகராறு காரணமாக இந்தப் பெண் பிள்ளைகளுடன் ஆற்றில் குதித்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வருகிறது.

பொதுவாகப் பார்க்கும் போது நடைபெற்ற எல்லாச் சம்பவங்களும் குடும்பத் தகராறு, மனஅழுத்தம் மற்றும் வறுமை ஆகியவை காரணமாக உள்ளன. எந்தப் பிரச்சினைக்கும் தற்கொலை தீர்வல்ல என்பதை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். தற்கொலை முயற்சி என்பது ஒரு விநாடியில் அல்லது ஒரு சில நிமிடங்களில் எடுக்கும் முடிவல்ல. நீண்டகாலமாகத் திட்டமிட்டு சரியான சந்தர்ப்பத்திற்காக காத்திருந்து எடுக்கப்படுவதே தற்கொலை முயற்சி. அம்முடிவுக்கு வந்தபின் அவர்கள் எதைப் பற்றியும் சிந்திப்பதில்லை.

தற்கொலை முயற்சி என்பது அத்தீர்மானத்துக்கு வருவோருக்கு சாதாரணமானதாகவே இருக்கும். ஆனால் மரணபயம் என்பது எல்லோருக்கும் இருக்கும். உயிர் ஊசலாடும் அந்த ஓரிரு வினாடிகளில் மரணத்தின் விளிம்பை மனதால் காணும் அந்தக் கணப் பொழுதுகளில் வேண்டாம் இந்த விசப்பரீட்சை என்று சொல்லி எப்படியாவது உயிர் தப்ப வேண்டும் என்று தவிப்பார்கள். பெரியவர்கள் எப்படியாவது சிறிது நேரத்துக்குத் தாக்குப் பிடிப்பார்கள். பிஞ்சு உயிர்கள் எவ்வாறு தாங்கிக் கொள்ளும்? அநியாயமாக உயிரைப் பறிகொடுத்து விடுவார்கள். நடை பெற்ற சம்பவங்களில் தற்கொலை முயற்சியை மேற்கொண்ட பெற்றோர் காப்பாற்றப்பட்டுள்ளார்கள். ஆனால் எந்தப் பாவமும் அறியாத பிஞ்சு உயிர்களே பெற்றோரின் குடும்பப் பிரச்சினைக்கும் வறுமைக்கும் தண்டிக்கப்பட்டுள்ளார்கள்.

தான் மாத்திரம் கிணற்றில் பாய்ந்து இறந்து போவது தற்கொலை. குழந்தைகளுடன் பாய்வது என்பது தற்கொலையல்ல. அது கொலையாகும். தனது உயிரை மாய்த்துக் கொள்வதையே அனுமதிக்காத போது எவ்வாறு அடுத்தவர்களது உயிரைப் பறிக்கலாம்.

அடுத்தவாரப் பத்தரிகையில் மற்றுமொரு சம்பவம் பதியப்படுவதற்கு முன்னர், இவ்வாறு குழந்தைகளுடன் கிணற்றிலும் ஆற்றிலும் பாயும் சம்பவங்களுக்கு முடிவு கட்டப்பட வேண்டும். முன்னர் குழந்தைகளோடு கிணற்றில் பாய்ந்து தற்கொலை முயற்சியை மேற்கொண்டு காப்பாற்றப்பட்ட தாய்மார்களுக்கு உரிய உளவள ஆலோசனைகளையும் தேவைப்படின் தண்டனைகளையும் வழங்க வேண்டும். இதன் பிறகு எந்தப் பெற்றோரும் இது போன்ற ஒரு முயற்சியை மேற் கொள்ள முடியாதவாறு அந்த செயற்பாடுகள் அமைதல் வேண்டும்.

# கவிதைகள்

## பாரதியின் கல்லறை புலம்பல்

கோபத்தில் ஒரு குரல்
கல்லறையில் இருந்து
காற்றில் மிதந்து வந்து
காதில் விழுந்து
இதயத்தில் புகுந்து
இழிவான தகவல்
இன்று ஒரு தேதி என்றது....
அடிமனதில் இடிமுழக்கம் குடிகொள்ள
கடும் சினத்தோடு எழுந்தேன்
கல்லறை தகவல் என்பதால்!
அதுதான்
அடிமை இல்லை பெண் என்று
ஆயுள் முழுவதும் குரல் கொடுத்து
விடுதலை வேட்டை நடத்தி
சரித்திரத்தில் இடம் பிடித்து
சமாதியில் உறங்கும் குரல்!
தாய்க் குலத்தின்
கேவல செயல்களால்
கண்ணீர் சிந்திய வண்ணம்
கரகரத்த குரலில்
காதில் ஊதிச்சென்றார்
கவி வடித்து
செவிகளுக்குள் செலுத்தும்படி
அவரை வணங்கி இணங்கி
அவரின் கவி மொழியில் முயன்றேன்
முடியவில்லை!
என்னால் முடிந்தவரை வடிவம்
கொடுக்கிறேன்
கவனமாய் கேளுங்கள் மாதர்களே...!
கவிஞர் சொன்னவை இவை என்பதால்
தாய்க் குலமே தங்கையர்களே
அன்பின் கோயில்களே
அதில் வாழும் தெய்வங்களே
குடும்ப பிணக்கு வரும்
வறுமைக்கோடுகள் குடியமரும்
அத்தனை துன்பங்களும்
போலிமுகம்கள்
ஜாலியாய் வாழும் காலம் வரும்
காலியாக்க வேண்டாம் பாசத்தை!
தன் கல்லறை முழுவதும்
தன்னால் ஏற்க முடியாத சேதிகளாம்
பெண்மை புகழ் பாடினாராம்
பெருமைகள் பல கூறினாராம்
அத்தனையும் அழியும் வண்ணம்
இழிவான சேதிகள் மட்டும்தானாம்
இப்போது கல்லறைக்கு வருகிறதாம்
ஆண்மைக்கு பெண்மை
பிறப்பது போல்
பெண்களுக்கு ஆண்குணம்
தரிப்பது போல்
பெற்ற பிள்ளைகளை
தெருவில் விட்டும்
பிள்ளை மனம் பித்தும்
பெத்த மனம் கல்லுமாய்
சரித்திரம் நிகழ்த்தும் சாம்ராஜ்யமாய்
மாறுவது போல்
சிதம்பு நடத்தும் சேதி வேண்டாமாம்!
சிதம் நிறைந்த சிந்தாமணிகளாய் மாறி
சிதறும் பச்சிளம் பாலகர்களின்
கதையாகவும்
சிந்தை முழுவதும் சிங்காரம்
மலரட்டுமாம்
சித்தி அடையும்வரை கல்லறை
செல்கிறாராம்...
அடுத்தமுறை எழுந்து வராமல்
அவதானித்துக் கொள்ளுங்கள்
கோதயர்களே!

ஏ.பாரிஸ், மிகிந்தலை.

## துன்பம்

புரியாத அனைவரும்
என்னைப் புரிந்துகொண்ட
சமயம் புரிந்த நீ - என்னை
பிரிந்து சென்றாய்

எஸ்.கே.டபிள்யூ. டெல்மர்,
தவளந்தன்னை

## நீயும் நானும்

நடந்து சென்ற வீதியில்- நான்
மட்டும் -இன்று
தனியே நடக்கின்ற போது
உன்னைத் தேடுகின்றன
என் கண்கள் -அன்பே
அழைத்துச் சென்று விடு
உன்னுடன் மரணம் வரை
வாழ்ந்து -மறுமை
வாழ்க்கையிலும்
இணைந்துவாழ....!

எஸ்.எச்.நஸ்ரத்,
திருகோணமலை.

## கனவுகள்

அலை கடலாய் அலைந்து
திரிந்த என் கனவுகள்
இன்றும் கரையை அடைய
துடிக்கின்றன ஆனால்
முடியாமல் தவிக்கும் என்
நெஞ்சங்கள் கண்ணீருடன்
கரைகின்றன.

கே.சுலு. இக்டன் தோமஸ்.



## அப்பாவின் உறவு

சிறு வயதில் இருந்தே!
உன் பாசம் எனக்கு
கிடைக்கவில்லை
தேடி பார்த்தேன் -நீ
வெகு தூரம் சென்றுவிட்டாய்
ஒரு முறையாவது உன்னை
பார்க்க நினைத்தேன்
என் கண் முன்
தென்படவேயில்லை
அன்றொரு நாள்
ஒரு செய்தி- உன் அப்பா
மறைந்து விட்டார் என்று
அன்றாவது பார்த்து விடலாம்
என்று முயற்சித்தேன்- அந்த
அதிர்ஷ்டமும் கூட எனக்கு
கிடைக்கவில்லை
அப்பா! இவ்வளவுதானா
எனக்கும் உனக்கும் உள்ள
உறவு?

பா.ரூபா, சந்திரிகாமம்.

## அன்பே நம் வாழ்வில்

நாம் நேசிப்பவை எல்லாம்
கிடைப்பதில்லை!
கிடைப்பவற்றையெல்லாம்
நாம் நேசிப்பது இல்லை!

வ.பிரார்திகா, வவுனியா.

## அன்பு

அன்பே
ஒரு நிமிடம் நீ என்னை
காணத் துடித்தால் - உன்
இமைகளை மெதுவாக
மூடிக்கொள் - உன்
இதயம் துடிக்கும் தூரத்தில்
நான் வந்து நிற்பேன்

தி.சுபா, இறக்குவானை



## வரம்

கடவுள்!
வந்து உன் முன்
தோன்றினால் என்ன
வரம் கேட்பாய்!
எனக்குத் தெரியாது?
என்னிடம் கேட்டால்!
ஒரு நிமிடம் கூட
உன்னை பிரியாத
வரம் கேட்பேன்!

ஆர்.ரமணி, கண்டி.

## வெறுப்பு

உன்
மென்மையான
பாதங்களை
காயப்படுத்தும்
முட்களை
நான்
எவ்வளவு
வெறுக்கின்றேனா?
அவ்வளவு
வெறுக்கின்றேன்
உன்னை எனக்கு
தாரமறுத்த
என் காதலை

க.நிஷல்ராஜ்,
லெதண்டி.

## சேர்ப்பான் நம்மை இறைவன்

பிரியமானவனே!
அன்று இரு கண்களாலும்
உன்னைப்பார்த்த எனக்கு
உன்னுடன் மனம் விட்டு
நேருக்கு நேர் நின்று
கதைக்க தெரியவில்லை
பரம்மன் படைத்தான
என்னைப் பெண்ணாக
எனக்கு பயத்தையும்
சேர்த்தல்லவா தந்துள்ளான்
ஆசை இருந்தும்
பயம் விடவில்லை
முடிவு பிரிவாகி விட்டது
காதலின் ஆழம் பிரிவென்றால்
பிரிந்திருப்போம் காலம் வரும்
அன்று -சேர்ப்பான் நம்மை இறைவன்

டி.பிருந்தா, மன்னார்.

## புரிந்து கொள்வாயா?

எனக்காய் நீ என்று
அன்பினால் வந்த நீ
அவஸ்தைப்பட
வைக்கிறாய் என்னை
மறக்க நினைத்தேன்
உன்னை ஒரு நாளாவது
மறந்தால் உன் மரணநாள்
என்றது என் அன்பு

ஏ.எப்.சஹானா, நிந்தவூர்-09



## சுமை அல்ல

கடலுக்கு மீன்கள்
சுமை அல்ல
வானுக்கு முகில்கள்
சுமை அல்ல
மரங்களுக்கு இலைகள்
சுமை அல்ல
இலட்சியத்தை அடைய
எண்ணும்
உள்ளங்களுக்கு
சவால்கள் சுமைஅல்ல

ப.ருஷாந்தினி,
ஹொரட்டன்.

## காதலியின் கனவு

அன்று பேசியதும் நீ
இன்று பேசாமல்
இருப்பதும் நீ
குழந்தை போல் இருந்த
என் மனதைத் திருடினாய்!
போர்தை போல் இருந்த
என் தூக்கத்தை பறித்தாய்!
சுதந்திரமாய் இருந்த
என் நினைவுகளை
பறித்தாய்!
இப்பொழுது நீ மட்டும்
நிம்மதியாய் இருப்பது
ஞாயமா?
இது காதலா? இல்லை
காதலின் கனவா?

எஸ்.பி.ரிஹாமா,
இறக்குவானை

## மனித வேட்டை...!

மானிடமோர் அற்பம்
என்றெண்ணி மனித
வேட்டையாடும் வல்லரசுகள்
அவர்தம் உதிரம் எனும் கடலில்
படகோட்டி விளையாடி
மகிழும் அதிசயம்!
காணவே மனம் கொதித்தெழும்
உள்ளங்கள் கண்ணீரோடு
பிரார்த்தனையும் மௌனமாய் புரிகிறது
அநீதிக்கெதிர் குரல் கொடுக்க
துடிக்கும் இதயங்கள் துப்பாக்கி
முனையில் அடக்கப்படுகிறது!
மனித உள்ளம் கொண்ட
பேராசை காரணமாய்
மதுவுக்கும் மாதுக்கும்
விலைபோகும் அதிகாரிகள்
இன்றைய உலகின்
நாளைய கயவர்கள்!

எம்.யூ.அல்சாக், ஓட்டமாவடி.

## காதல் என்பது


காகிதங்களில் வரைகின்ற ஓவியம் அல்ல,
இதயங்களில் செதுக்கப்படும்
காவியம் காதல்.
இதயங்கள் முன் மொழிந்து
உணர்வுகள் வழிமொழிய வேண்டும் காதல்
இதுவரை அணைக்கப்படாத நெருப்பு
சுடும் என்றே தெரிந்து
சுட்டுக்கொள்கின்ற சுகமான உணர்வு
காதலை எழுத
எழுத்தாணிகள் தேவையில்லை
இரு சொட்டுக்
கண்ணீரே போதுமானது
காதலை வென்று காவியம் பாடுவது
உண்மையிலேயே சாதனை தான் காதல்...!
வாழ்க்கையில் நிச்சயம் சந்திக்க
வேண்டிய உணர்வு!

எம்.புஸ்பா, நோட்டன் பிரிட்ஜ்,

உதய சூரியன் "கவிதைச்சரம்"
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்
இல. 68, எலிஹவுஸ் வீதி, கொழும்பு 15.
பெயர்:------------------------
முகவரி:------------------------
தொலைபேசி இல------------------

# நினைத்ததை முடிப்பவன்! 50

பாலா.சங்குப்பிள்ளை



பணம் வரும்போது இரண்டு கால்களுடன் வரும். போகும்போது பல கால்களுடன் போகும். இன்ஸ்பெக்டர் செல்வக்குமரன் கருப்புசாமியை சினத்துடன் நோக்கினார்.

"என்னவொரு மூடத்தனம். முதுகெலும்பையும், மண்டையோட்டையும் வச்சிக்கிட்டு புதையல் எடுக்கப் போறேன்னு எவனோ ஒரு முட்டாள் சொன்னான்னுறதுக்காக மூடிய குழியைத் தோண்டினேன், கொலை செய்யப் போனேன்னு சொல்லுறியே உனக்கு வெட்கமாயில்லையா....?"

"இல்லையில்லை... இது மூடத்தனம் இல்லை. அந்தக் குகையை உள்புறமா மூடியிருக்கிற பாறையில மண்டையோடும் முதுகெலும்பும் வச்சி அழுத்துற அளவுக்கு அதே மாதிரியான பள்ளம் இருக்கிறதை நானும் பார்த்தேன். ரெண்டையும் சரியா பொருத்தி அழுத்தினா நிச்சயம் கதவு திறக்கும்னுற நம்பிக்கை எனக்கும் வந்ததாலத்தான் இதுல ஈடுபட்டேன். அதுபோக எனக்கு அவசரமா பணம் தேவைப்பட்டிச்சி. இந்த உலகத்துல பணம்தான் முக்கியம். பணம் இல்லாத மனுஷன் அம்பு இல்லாத வில்லைப் போன்றவன். இறைவன் வானத்தை ஆள்கிறான். பணம் உலகையே ஆள்கிறது...."

"என்ன தத்துவம் பேசுறியா...."

"இது தத்துவம் இல்லை உண்மை. உலகத்திலேயே சோகம் தோய்ந்த வரலாற்றைக் கொண்டிருக்கிற நம்ம தோட்டத் தொழிலாளர் சமுதாயம் படிப்புலயும், அரசியல்லயும் மட்டும் எழுச்சி பெற்றால் மட்டும் போதாது. பணம் வேணும். புதையல் மூலமா அதை ஆண்டவன் நமக்கு அடையாளம் காட்டுறான். அது நமக்கு உரிமையுள்ளது."

செல்வக்குமரன் - சிந்தனையுடன் அவனைப் பார்த்தார்.

"உன்னோட உளறலைக் கேட்கிறதுக்காக நான் உன்னை இங்கே கொண்டு வரலை. உனக்கு பணம் குடுத்த அந்த டிப்டொப் ஆசாமியைப் பிடிக்க பொலிஸ் போயிருக்கு. நீ இப்போ எனக்கு செய்ய வேண்டியதெல்லாம் இதுக்கு தலைவன்னு ஒருத்தன் இருப்பானே... அவன் யார்ன்னு சொல்லனும்....."

"எனக்கு அதெல்லாம் தெரியாது. எனக்குப் பணம் குடுத்தது என்னை இயக்கியதெல்லாம் அந்த டிப்டொப் ஆசாமிதான்."

"டிப்டொப் ஆசாமி உன்னிடம் அவனைப் பற்றி எதுவுமே சொல்லலையா... ஆச்சரியமா இருக்குதே...."

"நான் உண்மையைத்தான் சொல்லுறேன். என்னோட குறிக்கோள் பணம் மட்டும்தான். அதுனால யார் என்னன்னுறதெல்லாம் எனக்குத் தேவையில்லாத விஷயமா பட்டிச்சி...."

செல்வக்குமரன் - சற்றுநேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். அவரைப் பொறுத்தவரை அவரிடம் ஒப்படைக்கப்பட்ட இந்தப் புதையல் சம்பந்தமான கேஸும் மற்ற இரண்டு கேஸ்களும் கிட்டத்தட்ட முடிவுக்கு வந்துவிட்டன. ஆனால், புதையலில் சம்பந்தப்பட்ட பிரதான குற்றவாளி மட்டும் இன்னமும் யாரென்று தெரியவில்லை. அதுமட்டும் தெரிந்துவிட்டால் எல்லா வழக்கும் முடிவுக்கு வந்துவிடும். அப்போது சட்டென கருப்புசாமி தன் சேர்ட் பொக்கற்றிலிருந்து அந்த கைபேசியை எடுத்து இன்ஸ்பெக்டரிடம் கொடுத்தான்.

"எனக்கு ஒரேயொரு உதவிசெய்ய முடியும். இது என்னோட செல்ஃபோன். ரெண்டு நாளைக்கு முன்னால ஒரேயொரு முறை முகம் தெரியாத அந்த மனிதர் என்னோட ஃபோன்ல பேசினாரு. விஷயத்தை சீக்கிரமா முடிச்சா பேசப்பட்ட பணத்தைவிட அதிகமா தாரதா சொன்னாரு. ஆனா அவர்தான் சம்பந்தப்பட்டவரான்னு எனக்குத் தெரியாது. அவரோட ஃபோன் நம்பர் இதுல பதிவாகியிருக்கலாம். எனக்கு நம்பர் தெரியாது. முயற்சி பண்ணிப் பாருங்க..."

செல்வக்குமரன் மகிழ்ச்சியுடன் அதை வாங்கினார். முதலில் அந்த கைபேசிக்கு வந்த இலக்கங்களையெல்லாம் ஒரு வெள்ளைத்தாளில் எழுதினார். அவற்றில் ஒரேயொரு முறை மட்டும் வந்த புதிய நம்பரைத் தனியாக தாளில் பிரித்தெடுத்தார். அந்த அழைப்பு இரண்டு நாளைக்கு முன்பு ஃபோனில் பதிவாகியிருந்தது. செல்வக்குமரன் அந்த எண்ணையே உற்றுபார்த்தார். அது அவருக்கு பழக்கப்படாத புதிய இலக்கமாக இருந்தது. அவர் தன் தொலைபேசியில் அந்த இலக்கத்தைச் சுழற்றினார். அழைப்பு போனது. சிறிது நேரத்தில் குரல் கேட்டது.

"ஹலோ நான் சட்டத்தரணி கலிங்கன் பேசுறேன்.... நீங்க யாரு....?"

(தொடரும்.....)

## மதிப்புக்குக்காரணம்

திரைச் சீலையைப் பார்த்து கொடிகேட்டது. "நாம் இருவரும் அரசனுக்குத் தொண்டு செய்பவர்கள். நான் மலை, காடு, பாலைவனம் என்று புழுதியிலும், காற்றிலும் துன்புற்று நீண்ட பயணங்கள் செய்தும் உனக்கிருக்கும் மதிப்பு எனக்கு இல்லையே! உன்னை அழகிகள் அலங்கரிக்கிறார்கள். வாசனைத் திரவியங்களால் மணம் கமழவைக்கிறார்கள். இதற்கு என்ன காரணம்?" திரைச் சீலை அடக்கமாகச் சொன்னது, "என் தலை எப்போதும் தரையைத் தொட்டுக்கொண்டிருக்கிறது. உன் தலையோ அகந்தையுடன் ஆகாயத்தைப் பார்த்தபடி இருக்கிறது. காரணம் இது தான்."

ஷா அநி

## இந்த வாரம் உங்களுக்கு எப்படி

**30.05.13 முதல் 05.06.13 வரை**

| | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
|---|---|---|---|---|---|---|---|
| மேஷம் | இலாபம் | உயர்வு | நலம் | நன்மை | நிம்மதி | பக்தி | நலம் |
| ரிஷபம் | நன்மை | சினம் | இலாபம் | செலவு | எதிர்ப்பு | பரிசு | நன்மை |
| மிதுனம் | போட்டி | அன்பு | பொறுமை | இலாபம் | வரவு | பயம் | நற்செயல் |
| கடகம் | தனம் | போட்டி | போட்டி | போட்டி | ஏமாற்றம் | பகை | தடங்கல் |
| சிம்மம் | வெற்றி | ஜெயம் | நட்பு | விவேகம் | புகழ் | பரிவு | ஆர்வம் |
| கன்னி | அமைதி | நன்மை | ஆதரவு | தடங்கல் | ஊக்கம் | பாராட்டு | சாந்தம் |
| துலாம் | பயம் | பகை | சலனம் | அமைதி | உதவி | பிரீதி | செலவு |
| விருச்சிகம் | தாமதம் | இன்பம் | கவனம் | பொறுமை | மறதி | ஓய்வு | குழப்பம் |
| தனுசு | நலம் | தீரம் | உதவி | அன்பு | பெருமை | வரவு | வெற்றி |
| மகரம் | கோபம் | பெருமை | தேர்ச்சி | மகிழ்ச்சி | ஆக்கம் | தடங்கல் | துன்பம் |
| கும்பம் | திறமை | மகிழ்ச்சி | புகழ் | வெற்றி | அசதி | வெற்றி | விவேகம் |
| மீனம் | புகழ் | எதிர்ப்பு | நற்செயல் | இன்பம் | போட்டி | இன்சொல் | இரக்கம் |

# வாக்குரிமையை பெற்றுக் கொள்வோம்!

**வா**க்குரிமை என்பது எமது அடிப்படை உரிமையாகும். இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்புகள் 3 ஆவது உறுப்புரையில் உறுதிசெய்யப்பட்டுள்ள வாக்குரிமையை பெற்றுக்கொள்ள வேண்டியது இலங்கை பிரஜை ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

வாக்காளர்களாக தம்மை வருடந்தோறும் பதிந்துகொள்வது என்பது ஒவ்வொரு பிரஜையினதும் மிக முக்கியமான விடயமாகும். காரணம், வாக்காளர் பதிவைக்கொண்டவர் அதனை உறுதிப்படுத்தியே இலங்கையில் பல அரச சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும் என்பது பெரும்பாலானோருக்கு தெரியாத விடயமாகும்.

அதாவது ஒருவரின் பிறப்பு முதல் இறப்பு வரை பெரும்பாலான அரச சேவைகள் இந்த வருடாந்த வாக்காளர் பதிவின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது கிராம அலுவலர் ஊடாக நாம் ஏதாவது சேவையை பெற்றுக்கொள்ளவோ, உறுதிப்படுத்தவோ வேண்டுமானால் கட்டாயம் நாம் வசிக்கும் பகுதியில் வாக்காளர் பதிவு செய்யவேண்டும். உதாரணமாக, பாடசாலைக்கு பிள்ளைகளை அனுமதித்தல், புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பித்தல், அரச நிவாரணங்களை பெற்றுக்கொள்ளல், பதிவினை உறுதிப்படுத்தல், நீதிமன்ற நடவடிக்கைக்கு, வருமானம் உறுதிப்படுத்தல் போன்ற ஒரு சில வேலைகளைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு முக்கியத்துவம் மிக்க வாக்காளர் பதிவுகள் மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் அவ்வளவாக கவனத்திற் கெடுக்கப்படாத விடயமாகவே காணப்படுகின்றது. சமூக ரீதியாக ஒப்பீட்டுப் பார்க்கின்றபோது மலையக பெருந்தோட்டத்துறையைச் சார்ந்தவர்களிலே கிட்டத்தட்ட ஐம்பது ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இன்னும் தம்மை வாக்காளர்களாக பதிவு செய்துகொள்ளவில்லையென்பது ஆய்வின் மூலம் தெரியவந்திருக்கின்றது.

மலையகப் பெருந்தோட்டத்துறையைச் சார்ந்த கணிசமான இளைஞர்கள், யுவதிகள் மற்றும் முதியோர் வெளியிடங்களிலேயே தொழில் புரிகின்றனர். இதனால் இவர்கள் வாக்காளர் பதிவு காலத்தில் வாக்காளர்களாக பதிந்துகொள்வதில் ஆர்வம் காட்டுவது இல்லை.



அத்தோடு பெரும்பாலான வீடுகளுக்கு வாக்காளர் படிவம் வழங்கப்பட்டாலும் அதை பூர்த்திசெய்து வழங்குவதில்லை. தமக்கு வாக்காளர் பதிவு படிவம் வழங்கப்பட்ட போதும் அதைப்பெற்று பதிவு செய்வதற்கான அக்கறை கொள்ளாமை, விண்ணப்பப் படிவத்தை தாமதித்து வழங்குதல் போன்ற காரணங்கள் உங்களது பெயர் வாக்காளர் பட்டியலில் இருந்தது நீக்குவதற்கான காரணமாக அமையலாம்.

இவ்வாறு வாக்காளர் பதிவில் ஆர்வம் கொள்ளாதவர்கள் பின்னர் ஏதாவது தமது அவசர தேவைக்காக பதிவு சான்றிதழையோ வேறு ஏதாவது கடிதமோ பெறுவதற்காக கிராம அலுவலரிடமோ பிரதேச செயலாளரிடமோ செல்கின்றபோது தமது சேவையை பெற்றுக்கொள்ள சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது. இவ்வாறு வாக்காளர் பதிவில் தமது பெயர் இல்லாது தமது அவசர தேவை களை, சேவைகளை பூர்த்தி செய்துகொள்ள முடியாமல் அவஸ்தைபடுபவர்களை எம் கண்முன்னே காணக் கூடியதாகவும் உள்ளது.

ஆகவே, எமது அடிப்படை உரிமையான வாக்குரிமையைப் பெற்றுக்கொள்ளவும், முழுமையான அரச சேவையை பெற்றுக்கொள்ளவும் வாக்காளர் பதிவு மிக முக்கியம் என்பதை தெரிந்துகொள்ள வேண்டும்.

தற்போது இவ் வருடத்திற்கான வாக்காளர் பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வருடந்தோறும் மேற்கொள்ளப்படும் தேருநர்கள் கணக்கெடுப்பு இம்மாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப் பட்டுள்ளது. வீட்டு உரிமையாளர்களுக்கு பீ.சி. படிவங்களை வழங்குதல் 2013-05-15 ஆம் திகதி தொடக்கம் 2013-06-02 ஆம் திகதி வரையும், அவற்றை மீளப்பொறுப்பேற்றல் 2013-06-02 ஆம் திகதி முதல் 2013-06-30 திகதி வரையும் மேற்கொள்ளப்படும். இந்த காலப்பகுதியில் நீங்கள் வீட்டில் இல்லாதிருந்தால், மூடியிருந்தால், கிடைக்கின்ற படிவத்தை பூர்த்திசெய்து மீளவழங்காதிருந்தால் தேருநர் இடாப்பில் இருந்து உங்களது பெயர் நீக்கம் செய்யப்படும். அதன்பின் எவ்வாறான காரணங்கள் சமர்ப்பித்தும் பழைய தேருநர் இடாப்பில் பெயரை உட்சேர்ப்பதற்கான அவகாசம் 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களை பதிவுசெய்தல் சட்டத்தில் ஏற்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் உங்களுக்கு வாக்காளர் பதிவிற்கான விண்ணப்பம் கிடைக்கவில்லையெனின் அது சம்பந்தமாக உங்களது கிராம அலுவலர் அல்லது பிரதேச செயலாளர், மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவரவேண்டும்.

மலையக மக்களுக்கு வாக்குரிமை என்பது இலகுவாகக் கிடைத்த ஒன்றல்ல. மாறாக, நாம் பல போராட்டங்களையும் எதிர்ப்புகளையும் சந்தித்தே வாக்குரிமையை பெற்றுக்கொண்டோம். எமது வாக்குரிமை பறிக்கப்பட்டு நாம் இரண்டாந்தர பிரஜைகளாக்கப்பட்டதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே, வாக்காளர் பதிவு என்பது எமது சமூக கடமை. அதை யாரும் தட்டிக் கழிக்க முடியாது.

ஆதலால் மலையகப் பெருந்தோட்டத்துறையைச் சார்ந்த அனைவரும் வாக்களிப்புகளில் ஆர்வம் காட்ட வேண்டும். தமது பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள் வெளியிடங்களில் வேலை செய்தாலும் அவர்களது விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்து கொடுக்க வேண்டும். அத்தோடு வாக்காளர் பதிவின் முக்கியத்துவம் பற்றி ஏனையோருக்கும் அறிவுறுத்த வேண்டும். அத்தோடு வாக்காளர் கணக்கெடுப்புக்காக தோட்டங்களுக்கு வருகின்ற உத்தியோகஸ்தர்களுக்கு தமது தோட்டத்தில் உள்ள அனைவரது பதிவுகளை மேற்கொள்வதற்கான உதவிகளை படித்தவர்கள், இளைஞர்கள், யுவதிகள், சமூக நலன்விரும்பிகள் முன்வந்து வழங்கவேண்டும்.

ஆகவே, 2013 ஆம் ஆண்டு தேருநர் இடாப்பில் உங்களதும், உங்கள் அயலவர்களினதும் பெயர்களை பதிந்துகொள்ள அனைவரும் முன்வரவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

**எஸ்.சந்திரமோகன்**


## தேவை

கல்வித் தகைமை உள்ளோர், அற்றோர் இருபாலருக்கும் எம்மிடம் நிரந்தர தொழில். பிரதான தொழிற்சாலைகளில் ஜேம், கோர்டியல், பிஸ்கட், PVC க்ளவுஸ், பால்மா போன்றவற்றுக்கு உற்பத்தி, லேபல், பொதியிடல், தரம் பிரித்தல் பிரிவுக்கு ஆண், பெண் 18–50 வயதினர் உடனடியாகத் தேவை. சம்பளம் 18000/=, 25000/= 32000/= உணவு, தங்குமிடம், சகாய விலைகளில். (தம்பதியர், நண்பர்கள், குழுக்களாக ஒரே தொழிற்சாலைகளில்) வருகை தரும் நாளிலேயே வேலை.

விரைவாக தொடர்பு: 077-8508118

## நஷ்டம்

நீசனுக்கு நீ செய்யும் நூறு உபகாரங்களும் நஷ்டம். மூடனுக்கு அளிக்கும் நூறு புத்திமதிகளும் நஷ்டம். கேளாதவனுக்கு சொல்லும் நூறு நல்லுபதேசங்களும் நஷ்டம். அறிவில்லாதவனுக்கு அளிக்கும் நூறு ஞானோபதேசங்களும் நஷ்டம். பாத்திரமில்லாதவனுக்கு அளிக்கும் நூறு தானங்களும் நஷ்டம். நன்றியற்றவர்களுக்கு செய்யும் நூறு உதவிகளும் நஷ்டம். குணமற்றவர்களுக்குக் காட்டும் நூறு கருணையும் நஷ்டம்

வேர்கள்
மண்ணுக்குள்
இருக்கும் வரை தான்
பூக்கள் பூக்கும்.
நினைவுகள் இதயத்தில்
இருக்கும் வரைதான் அன்பு
நீடிக்கும்.



**சுந்தரி:-** நாளுக்கு நாள் குண்டாகிட்டே போகிறாய் நீச்சல் அடித்தால் இளைத்து விடுவாயடி...

**ராஜீ :-** அது எப்படி...? திமிங்கிலம் கடலிலே தானே 24 மணி நேரமும் இருக்கு... அது இளைத்தா இருக்கு?

## என்னதான்...

என்னதான் கூகுள் பெரிய சேர்ச் வெப்சைட்டா இருந்தாலும் கோவில்ல காணாமப் போன என் செருப்பை தேடித்தர முடியுமா?

ஓட்டப்போட்டியில கால் என்னதான் வேகமா ஓடினாலும் கைக்குத்தான் பரிசு

என்னதான் பெரிய முக்கோணமா இருந்தாலும் மூணு பக்கம் தான் இருக்கும்

என்னதான் பெரிய ஆளா இருந்தாலும் கால் தரையிலதான் இருக்கும்.

என்னதான் விலை குடுத்து பனியன் வாங்கினாலும் உள்ளதான் போட முடியும்.

என்னதான் பெரிய டான்ஸ் மாஸ்டராக இருந்தாலும் அவரோட சாவுக்கு அவராலே ஆட முடியுமா?


என்னதான் நீங்க சென்டிமென்ட் பாத்தாலும் கப்பல் கிளம்புறதுக்கு முன்னாடி எலுமிச்சம் பழம் எல்லாம் வைக்க முடியாது. சங்கு ஊதிட்டுத்தான் கிளம்பணும்.

✱ பணம் பேசக்கூடியது மட்டுமல்ல பேசுபவர்களின் வாயை அடைக்கக் கூடியதும் ஆகும்.

✱ ஒவ்வொரு திறமை வாய்ந்த மனிதனின் மூளையிலும் முட்டாள் தனமான பக்கம் ஒன்று கட்டாயம் உண்டு.

✱ அடிக்கடி தவறு செய்பவன் அப்பாவி.
ஒரே தவறை திரும்பத் திரும்பச் செய்பவன் மூடன்.
ஒரு தவறும் செய்யாதவன் மரக்கட்டை.
தன்னை அறியாமல் தவறு செய்து பின் திருத்திக் கொள்பவன் மனிதன்.





## கொஞ்சம் சிரிக்க சிந்திக்க

**ராஜு:** அவர் திடீர் பணக்காரர் ஆன பிறகு கூட ஆள் மாறலைங்க

**ரவி:-** பரவாயில்லையே நிஜமாகவா...?

**ராமு:-** ஆமாம் அவர் எனக்குத் தரவேண்டிய நூறு ரூபாய் கடனை இன்னும் தரலை...

## குற்ற உணர்வு

*ஒரு தவறு செய்தபின் அதற்காக நமக்குள் ஒரு குற்ற உணர்ச்சியை ஏற்படுத்திக் கொள்வதில் எந்தப் பயனும் இல்லை. அப்போது இல்லாத ஒரு புத்திசாலித்தனம் இப்போது வளர்ந்திருக்கிறதே என்று மகிழ்ச்சி கொள்ள வேண்டுமே தவிர நடந்த நிகழ்ச்சிகளுக்காக வருத்தப்பட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை.*

*குற்ற உணர்வு என்பது வளர்ந்துவிட்ட புத்திசாலித்தனத்தை வைத்து கடந்து போன வாழ்க்கையை நினைத்து நொந்து கொண்டிருப்பது. குற்ற உணர்வினால் மட்டும் ஒருவன் நல்லவனாகிவிட முடியாது. இன்னும் சொல்லப்போனால் குற்ற உணர்வு ஆழமாக ஆழமாக அந்தச் செயலை உங்களால் திருத்தவே முடியாது.*

*எந்த ஒரு செயலையும் செய்யும்போது யோசிக்காமல் செய்த பின் யோசிப்பது பிரேத பரிசோதனை செய்வதைப் போன்றது. இறந்து போனவரின் உடலை வைத்துக் கொண்டு அதிக பட்சம் என்ன செய்ய முடியும்? அழலாம். எப்படி இறந்தார் என்று கண்டு பிடிக்கலாம். வேறு ஒன்றும் செய்ய இயலாது. குற்ற உணர்வும் அது போன்றதே. குற்ற உணர்விலிருந்து தன்னை விடுத்துக்கொள்வது தியானம். மற்றவர்களைக் குற்ற உணர்வில் ஆழ்த்தாது இருப்பது சேவை.*

ஹலோ .. டாக்டர்..! காலையில 8 மணிக்கு என் மனைவி மூச்சுப் பேச்சு இல்லாம விழுந்துட்டா டாக்டர்..

அடப்பாவி.. ! இப்போ மதியம் 3 மணி ஆகுது.. இவ்வளவு நேரம் என்னய்யா பண்ணினே..?

சந்தோஷத்துல கையும் ஓடல.. காலும் ஓடல.. டாக்டர்..!




## நல்ல பழக்கம்

ஒரு நாள் ஒரு தாத்தா பேரக் குழந்தைகளுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அப்போது பேரன் ஏதோ பேச வாயெடுத்தான்.

தாத்தா சொன்னார் ''சாப்பிடும் போது பேசுவது நல்ல பழக்கமல்ல. சாப்பிட்டு முடிக்கும் வரை பேசாதே.'' பின் எல்லோரும் சாப்பிட்டு முடிந்தவுடன் தாத்தா பேரனிடம் விடயம் என்னவென்று கேட்டார்.

பேரன் முகத்தை மிக சோகமாக வைத்துக் கொண்டு ''இப்போது அதற்கு அவசியம் இல்லை,'' என்றான். ஏனெனக் கேட்க அவன் சொன்னான் ''நீங்கள் சாப்பிடும் போது உங்கள் சாப்பாட்டில் ஒரு பூச்சி இருந்தது- அதைத்தான் நான் சொல்ல வந்தேன்.'' என்றான்.

வாழ்க்கை
என்பது நீ சாகும்
வரை அல்ல
மற்றவர்கள் மனதில்
நீ வாழும் வரை

நண்பன் மீது
கோபம் கொள்ளலாம்.
ஆனால் காதலி மீது
கோபம் கொள்ளக் கூடாது.
ஏன் என்றால் நண்பன்
புரிந்து கொள்வான்.
காதலி புரியாமல்
கொல்வாள்.

ஆண்டவன்
சோதிப்பது
எல்லோரையும் அல்ல
உன்னைப் போல சாதிக்க
துடிக்கும் புத்திசாலியை
மட்டுமே

**நீதிபதி:-** ஏம்பா, மூணாவது தடவையா இந்த கோர்ட்டுக்கு வந்துருக்கியே உனக்கு வெக்கமாயில்லே?

**குற்றவாளி:-** நீங்க தினமும் வர்றீங்களே..... ஓங்களுக்கு வெக்கமாயில்லையா சேர்?

தேங்காயை தட்டிப்பார்த்து வாங்கணும்.
முருங்கைக்காய முறுக்கிப்பார்த்து வாங்கணும்.
வெண்டைக்காய உடைச்சுப்பார்த்து வாங்கணும்.
எதுவானாலும் காசு கொடுத்து வாங்கணும்.

கழுதைக்கும் மனிதனுக்கும் என்ன வித்தியாசம்?
மனிதனைக் கழுதைன்னு கூப்பிடலாம். கழுதையை மனிதன்னு கூப்பிட முடியாது

தூங்கறதுக்கு முன்னால எல்லாரும் என்ன செய்வாங்க ?
?????????
முழிச்சிருப்பாங்க

ராமு :- உங்க மருந்துக் கடையில எல்லா மருந்தும் கெடைக்குமா?
கடைக்காரர்: நிச்சயமா கெடைக்கும்பா
சிறுவன் : அப்படின்னா ஒரு கிலோ வெடிமருந்து தாங்க.

# இலங்கை பூராகவும் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டுவரும்

# Grand Homes & Constructions

இலங்கையில் தற்போது விசேடமான கட்டிடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.அந்தவகையில் தரமான கட்டிட நிர்மாணத்துறையில் Grand Homes & Constructions நிறுவனம் முன்னணி வகிக்கின்றது. இந்நிறுவனம் 8 வருடங்களாக வெற்றி நடை போட்டு வருகின்றது.



கிரேன்ட் ஹோம்ஸின் பிரதம நிறைவேற்று அதிகாரி பிரதீப்

இதனைப் பற்றி கிரேன்ட் ஹோம்ஸின் பிரதம நிறைவேற்று அதிகாரி பிரதீப் மற்றும் பிரதிப் பணிப்பாளர் உபுல் நயனகாந்தா தெரிவிக்கையில்;

இலங்கை பூராகவும் எமது கட்டிட நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். 8 வருட காலத்தில் கம்பஹா, கண்டி, குருநாகல், நுவரெலியா போன்ற பகுதிகளில் எமது சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இன்று வரை 354 கட்டிட நிர்மாணங்களை அமைத்துள்ளோம்.

அதிகமானோருக்கு வீடு அமைப்பதில் பல பிரச்சினைகள் உள்ளன. அதில்பிரதான காரணமாவது, வீடு கட்டுவதற்கான முழுமையான பணமின்மை, சிறு தொகையான பணத்தினை எங்களிடம் கொண்டு வரும்போது அவர்களுக்கு வங்கி மூலமாக கடன் வசதிகளைப் பெற்றுக்கொடுத்து கட்டிட நிர்மாணப்பணிகளை மேற்கொள்வோம். உதாரணமாக உதாரணமாக முன்னணி வகிக்கின்ற அரசாங்க மற்றும் தனியார் வங்கிகளிடமிருந்து கடன்வசதிகளைப் பெற்று அவர்களுடன் இணைந்து செயற்பட்டோம்.





உதாரணமாக இத்தாலி, பிரான்ஸ், சைபிரஸ், டுபாய் போன்ற நாடுகளில் கணவன்மார் மற்றும் மனைவிமார் இருவரும் வேலை செய்கின்றனர். அவர்களின் உறவினர்கள் இலங்கையில் வசிக்கும் போது அவர்களுக்கு வீடு கட்டுவதில் சிரமம் ஏற்படுகிறது. இதன் காரணமாக அவ்வாறான நாடுகளுக்கு நானும் என் தலைவரும் சென்றிருந்தோம். அங்கு அவர்களுக்கு வீடு அமைப்பதும் அதற்கான வடிவமைப்பிற்குமான ஆலோசனைகளை வழங்கினோம்.

அதன் பின்பு நானும் என் தலைவரும் திட்டமிட்டோம். வித்தியாசமான முறையில் புதிய வடிவங்களில் கட்டிடங்களை அமைத்து வழங்க வேண்டும் என்பதற்காக கிராண்ட் ஹோம்ஸ் நிர்மாணத்துறை நிறுவனத்தை அமைத்தோம்.

எமது நிறுவனத்தை 6 மாத காலமாக ISO குழுவினர் பரிசோதித்தனர்.

எமது வேலைப்பாடுகள் நாம் பயன்படுத்தும் பொருட்களின் தன்மை என பல்வேறு பரிசோதனைகளை மேற்கொண்ட பிறகு தான் எமக்கு ISO 90012008 தரச்சான்றிதழ் முதல் முதலாக கிடைக்கப்பெற்றது.

நாம் அரைசொகுசு வீடமைப்புகளை சொகுசு வீடுகளாகவும் மாற்றித் தருவோம்.

தற்போது 107 வீடமைப்புகளை நடத்திவருகின்றோம். அதில் 34 வீடுகள் பூர்த்தியடையும் நிலையிலுள்ளது.

மக்கள் சாதாரண தச்சனை வைத்து வேலை செய்வதை விட கட்டிட நிர்மாணத் துறையில் வீடமைப்பை கையளிக்கும் போது சிறந்த அனுகூலங்கள் கிடைக்கின்றன அவையாவன:

* தரம்
* வடிவமைப்பு
* குறித்த காலத்தில் வேலையமைப்பு
* உத்தரவாதம்

கட்டிட அமைப்பிற்கும் நாம் உத்தரவாதம் வழங்குவோம். வீடு அமைத்தபிறகு அதற்கான அனைத்து வரைபடங்களும் வழங்கப்படும்.



கிரேன்ட் ஹோம்ஸின் பிரதிப் பணிப்பாளர் உபுல் நயனகாந்தா

மக்கள் விருப்பத்திற்கேற்றவாறு வர்ணப்பூச்சின் நிறம், டைல்ஸ், மரப்பலகை வேலைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தெரிவு செய்ய முடியும். வீடமைப்பிற்கான முழுச்சுதந்திரம் வழங்கப்படும் என்றார்.

மக்கள் வீடமைப்பை மேற்கொள்ள முன் நிறுவனத் தரத்தை தேடியறிந்து தெரிவு செய்யவேண்டும் என்பது முக்கியமான விடயமாகும்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், எம்மிடம் தரம் வாய்ந்த கட்டிட கலை நிபுணர்கள் Chartes Architect உள்ளனர். திட்டப் பணி முகாமையாளர் உள்ளனர். எனவே கட்டிடம் அமைப்பதற்கான ஆலோசனைகள் வழங்குவதுடன், கட்டிடம் அமைத்த பிறகு எவ்வாறு அமையும் என்பதனை முன்பே 3D அமைப்பில் காண்பிக்கப்படும்.



நாம் கட்டிடம் அமைப்பதற்கு முன் கைச்சாத்திடப்படும் தொகை உறுதியானது. பொருட்களின் விலை அதிகரித்தாலும் அத்தொகையில் மாற்றம் ஏற்படாது. பொருட்களின் தரம் மாற்றமடையாது என்றார். நாம் பயன்படுத்தும் அனைத்து பொருட்களும் SLS தரம் வாய்ந்தவையாகும். நாம் அமைக்கும் கட்டிடங்கள் வேறுபட்டவை. எம்மால் அமைக்கப்பட்ட 354 வீடுகளும் 354 வடிவங்களைக் கொண்டுள்ளது, நீண்ட கால உத்தரவாதம் வழங்கப்படும்.

எமது நிறுவனம் 2009-2011 ஆண்டுகளில் தரமான நிர்மாணங்களுக்கான தேசிய விருதுகளைப் பெற்றுள்ளது.

குறித்த காலப்பகுதியில் எமது வேலைப்பாடுகள் செய்து முடிக்கப்படும். அத்துடன் விற்பனைக்கு பின்னான சேவைகள் வழங்கப்படும். மக்கள் வழங்குகின்ற காணிப்பகுதியில் சிறந்ததொரு வீடமைப்பினை வழங்குவோம்.

மேலும் எமது சேவையை வடக்கு, கிழக்கு பகுதியில் விஸ்தரிக்கவுள்ளோம் என்றார். மேலதிக விபரங்களுக்கு பிரதிப் 0727664825 உடன் தொடர்பு கொள்ளவும்.

எஸ்.ஜீவா

# உங்கள் காணியில் நிர்மாணிக்கும் ஆடம்பர மற்றும் அரையாடம்பர வீடுகள்

எங்களிடம் ஒரு முறை வந்து வித்தியாசத்தை உணருங்கள்.

## Grand Homes & Constructions (Pvt) Ltd.



உண்மையான அமைப்புத் தோற்றங்கள்

STANDARD COMPANY ISO 9001: 2008

துரித அழைப்புக்கு

**0727 664 825**

**0727 669 333**

உங்களுக்கு பொருத்தமான வரைபடங்கள்.

அனுபவமிக்க கட்டிட நிபுணர்களின் ஆலோசனைகள்.

ஒரு பிரபலமான ஆலோசகர் வழங்கும் வாஸ்து ஆலோசனைகள்.

அனுபவம்வாய்ந்த தகைமைபெற்ற குழுவினரால் மேற்பார்வை செய்யப்படும் நிர்மாணம்.

கட்டிட அமைப்புக்கான உத்தரவாதம்.

ISO தரச் சான்றும் ICTAD பதிவும் பெற்ற நிறுவனம்.

2009-2011 ஆண்டுகளில் தரமான நிர்மாணங்களுக்கான தேசிய விருதுகளை வென்ற நிறுவனம்.

**Visit: www.grandhomes.lk**

No-402/A, நீர்கொழும்பு வீதி, கந்தானை

வலுவான தரமான மற்றும் நம்பிக்கையான வீட்டை நிர்மாணிப்பதற்கு எங்களை நாடுங்கள்